Not for sale

ஜனவரி - பிப்ரவரி 2020

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



For Private Circulation only

## இயேசுவின் மரணத்தை நினைவுகூறுதல்

- மாபெரும் விடுதலை
- சீரேனே ஊரானாகிய சீமோன்
- ஒரு இரவில், ஆறு விசாரணைகள்
- நினைவு கூருதலின் விவாதங்கள்
- இயேசுவின் கடைசி இரவு மற்றும் அவரை சிலுவையில் அறையப்பட்டட போது நிறைவேறின தீர்க்கதரிசனங்கள்
- தனித்துவமான தியானங்கள்
- தங்கள் அறைக்குள் பிரவேசியுங்கள்

## இயேசுவின் மரணத்தை நினைவுகூருதல்

# ஆதியிலே



இயேசு தம்மை பின்பற்றுகிறவர்களை அனுசரிக்க வேண்டும் என்று சொல்லியிருந்த ஆசரிப்புகளில் இரண்டு முக்கியமான ஆசரிப்புகள், தம்முடைய மரணத்தின் நினைவுகூருதல் மற்றும் ஞானஸ்நானமாகும். ஒவ்வொரு வருடமும், இயேசு தம் வாழ்க்கையின் கடைசி வாரத்தில் அனுபவித்த விசேஷித்த வழக்ககளையும், சோதனைகளையும் நாம் கருத்தில் கொள்ளும்போது, அவருடைய ஊழியத்தில் நம்மை அர்ப்பணிக்கவும், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கான நமது உறுதிப்பாட்டை புதுப்பிக்கவும் இது நமக்கு உதவக்கூடியதாக இருக்கும்.

எகிப்தில் இஸ்ரயேல் புத்திரர், பஸ்கா ஆரம்பித்ததை பற்றி "மாபெரும் விடுதலை" என்ற தலைப்பு கூறுகிறது. லேவியர்களும், உண்மையுள்ள இரண்டு வேவுக்காரர்களையும் தவிர, இஸ்ரயேலின் தலைமுறை முதல் பஸ்காவின் உற்சாகமான ஆவியை தக்கவைத்துக்கொள்ளவில்லை. இதன்விளைவாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அவர்களால் பிரவேசிக்கமுடியவில்லை. கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்திருக்கும் நாம், ஒவ்வொரு வருடமும், இயேசுவின் மரணத்தை நினைவுகூருதலின் போது, ஒரு புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்பை உணர வேண்டும்.

மூன்று சுவிசேஷகர்களும் பதிவு செய்த சம்பவமான, இயேசு சிலுவையை கொல்கொதாவிற்கு எடுத்துச் செல்ல, உதவுவதற்காக இந்த நபர் கூட்டத்திலிருந்து அழைக்கப்பட்டதைப் பற்றி "சிரேனே ஊரானாகிய சீமோன்" என்ற தலைப்பு ஆராய்கிறது. நம் சகோதரர்களின் சிலுவையை சுமத்தலைப் பற்றியும், அவர்களின் கிறிஸ்தவ பயணத்தில் நாம் அவர்களுக்கு எவ்வாறு சிறந்த முறையில் உதவலாம் என்பதை பற்றியும் மூன்று கேள்விகளை இந்த பாடத்தின் ஆசிரியர் எழுப்புகிறார். இயேசு தம்முடைய வாழ்க்கையின் கடைசி இரவில் அனுபவித்த பல்வேறு விசாரணைகள் எவ்வாறு சட்டவிரோதமானவைகள் என்பதை "ஒரே இரவில் ஆறு விசாரணைகள்" என்ற தலைப்பு ஆராய்கிறது. இயேசுவிற்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என்பதை நிரூபிக்கும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க எந்த நடைமுறையையும் பின்பற்ற மூன்று யூத விசாரணைகளும், மூன்று ரோமானிய விசாரணைகளும் தவறிவிட்டது. இறுதியில், சீசருக்கு துரோகம் செய்தார் என்ற முத்திரை சூட்டப்படும் என்ற பயத்தினால் மட்டுமே இயேசுவை சிலுவையில் அறைய பிலாத்து அனுமதித்தார்.

அப்பம் மற்றும் பாத்திரத்தை பற்றியும், நினைவுகூருதலின் ஊழியத்தில் பங்கேற்கும் நமக்கு இவைகள் எதை அடையாளப்படுத்துகின்றன என்பதை பற்றியும் "நினைவுகூருதலின் வாதங்கள்" என்ற தலைப்பு ஆராய்கிறது. "இதை என் நினைவாக செய்யுங்கள்" என்று இயேசு கூறினார். நாம் இதில் ஒன்றாக பங்கேற்க வேண்டும் என்ற வாதத்தோடு, இந்த காரியத்தை பவுல் விரிவுபடுத்தினார். மொழிபெயர்ப்பு பிழைகளினால் எழும் தவறான புரிதலை ஆசிரியர் ஆராய்ந்து, கிறிஸ்துவின் நிமித்தம் நாம் படும் துன்பங்களைப் பற்றி சில பரிந்துரைகளை வழங்குகிறார்.

வருடத்தின் மற்ற இரவுகளைக் காட்டிலும் நினைவுகூருதலின் இரவு எவ்வாறு வேறுபடுகிறது என்பதையும், துன்பங்களையும், நமது கர்த்தரின் பலியின் உண்மையையும் நோக்கி நம் எண்ணங்களைத் திருப்புவதற்கு இது எவ்வாறு நம்மை நடத்த வேண்டும் என்பதையும் "தனித்துவமான தியானங்கள்" என்ற பாடம் விவாதிக்கிறது. இயேசுவின் பாடுகளைப் பற்றி, தனிப்பட்ட பார்வையில் எடுக்கப்பட்ட "பேஷன் ஆப் கிறைஸ்ட்" என்ற திரைப்படம், கர்த்தரின் கடைசிநாளை காட்சிகளாக காண்பிக்கிறது.

"தங்கள் அறைகளுக்குள் பிரவேசியுங்கள்" என்ற பாடம் "என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்து போகும் மட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள்" என்று ஏசாயா 26:20வில் இருக்கும் வார்த்தைகளை தியானிக்கிறது. இந்த பாடம் 1928 ஆம் ஆண்டின் *The Herald of Christ's Kingdom* நினைவுகூருதல் பதிப்புகளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

பாஸ்டோரல் பைபிள் நிறுவனத்தின் இயக்கநர்களும், *The Herald of Christ's Kingdom* ஆசிரியர்களும், வாசகர்களுக்கும், "அனைவருக்கும் ஈடுபலி" என்பதை மிக நெருக்கமாக பற்றி கொள்ளும் அனைவருக்கும், அசீர்வதிக்கப்பட்ட நினைவுகூருதலின் காலங்களுக்காக பிரார்த்தனைகளை ஏறெடுக்கிறார்கள்.

**மார்ச் / ஏப்ரல் 2020, தொகுப்பு 102, எண் 2**

**மாபெரும் விடுதலை** 2
பஸ்கா மற்றும் நினைவுகூருதல்

**சீரேனே ஊரானாகிய சீமோன்** 7
சிலுவை சுமத்தல்

**ஒரு இரவில், ஆறு விசாரணைகள்** 11
மீண்டும் மீண்டும் அநீதி

**நினைவு கூருதலின் விவாதங்கள்** 19
ஒரு மதிப்புக்குரிய. சிந்தனைமிக்க ஆய்வு

**இயேசுவின் கடைசி இரவு மற்றும் அவரை சிலுவையில் அறையப்பட்ட போது நிறைவேறின தீர்க்கதரிசனங்கள்** 25
இருபத்தி ஆறு கணிப்புகள்

**தனித்துவமான தியானங்கள்** 26
காலத்திற்கேற்ற சிந்தனைகள்

**தங்கள் அறைக்குள் பிரவேசியுங்கள்** 31
ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு அமைப்பு

**இன்றைய தீர்க்கதரிசனம்** 34
எழுச்சிக்கு எதிரான யூத எதிர்ப்பு

### பஸ்கா மற்றும் நினைவுக்கூருதல்

# மாபெரும் விடுதலை



*Jon Bivol*

"அந்த நாள் உங்களுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்கக்கடவது; அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக; அதை உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள்." (யாத்திராகமம் *12:14*)

நேரம் வந்துவிட்டது. தேவனுடைய பிள்ளைகளின் அழுகை அவரது காதுகளை எட்டியது. இது மாற்றத்திற்கான நேரமாக இருந்தது. எகிப்தின் அடிமைத்தனம், கட்டுப்படுத்தல், அடக்குமுறை ஆகியவற்றிலிருந்து இஸ்ரயேல் தேசம் விடுவிக்கப் படக்கூடிய நேரமாக இருந்தது. தேவன் எகிப்து தேசத்தின் மேல் தொடர்ச்சியான வாதைகளை அனுப்பிய போது இது உண்மையானது. அது முதல் பிறந்தவரின் மரணத்துடன் உச்சக்கட்டத்தை எட்டியது. சங்கார தூதன் கடந்து செல்வதற்கு முன், மாசற்ற ஆட்டுக்குட்டியை பலியிட்டு, அதன் இரத்தத்தை தாங்கள் அதைப்புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளிப்பதன் மூலம் இஸ்ரயேல் தேசம் காப்பாற்றப்பட்டது.

தொடர்ந்து வரும் சந்ததிக்கு நினைவுக் கூரும்படியாகவும், அதை பண்டிகையாக கொண்டாடும் படியாகவும், எபிரெயர்களுக்கு அந்த ஆட்டுக்குட்டியின் பலி ஒரு பரிசுத்த நாளாக மாறியது. பார்வோனின் ஆட்சியில் இருந்து விடுபட்டு, அன்பான தேவனால் வழி நடத்தப்படுவதற்கு, ஒவ்வொரு இஸ்ரயேலரின் இருதயத்தில் கடந்து வந்த மகிழ்ச்சியை கற்பனை செய்து பாருங்கள். இந்த சந்தோஷம் மிக நீண்ட காலம் நீடிக்காவிட்டாலும், அவர்கள் விடுவிக்கப்பட்ட உடனேயே அவர்கள் முறுமுறுத்து, குற்றம் சாட்டினாலும், பார்வோனின் ஆட்சியின் கீழ் இருப்பதற்கும், தேவனுடைய அன்பான கவனிப்பிற்கும் உள்ள வித்தியாசத்தை அவர்கள் காண முடிந்தது.

இந்த பஸ்கா அனுசரிப்பு தலைமுறை தோறும் கடந்து வந்தது. ஆனால் காலம் செல்ல செல்ல, அது தனிப்பட்ட உணர்வுகள் இல்லாத வெறும் கதையாக, வரலாறாக மாறியது. இஸ்ரயேலர் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டதை மறந்துவிட்டதோடு, நியாயாதிபதிகள் புத்தகத்தில் குறிப்பிட்டபடி, காலப்போக்கில் அவர்கள் பல முறை தங்கள் தேவனையே மறந்து விட்டார்கள். "தங்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின அவர்களுடைய தேவனாகிய கர்த்தரை விட்டு, தங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றிப்போய், அவர்களைப் பணிந்துகொண்டு, கர்த்தருக்குக் கோபமூட்டினார்கள்." (நியாயதிபதிகள் 2:12)

வாக்களிக்கப்பட்ட, பாலும் தேனும் ஓடுகிறதும், சுதந்திரமும் சமாதானமமும் உள்ள தேசத்தில் குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களின் வசதிகள் பெறுகும் போது, சிலர் தாங்கள் பெற்ற காரியங்களுக்கான நன்றி உணர்வை இழந்தார்கள், தங்கள் ஆசீர்வாதங்களை எண்ணிபார்க்க மறந்து விட்டார்கள். காலம் செல்ல செல்ல இஸ்ரயேல் புத்திரரின் பெற்றோர், "எகிப்தின் அடிமைத்தனத்தினால் தவித்து, அழுது, அவர்களின் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினதை" (யாத்திராகமம் 2:23) என்பதை நினைவுக்கூருவது, அவர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. விஷயங்கள் மிகவும் மோசமாகிவிடும் வரை, பல முறைகள் தேவனை மறந்துவிட்டார்கள். பின்னர் அவரை நினைத்து, மனந்திரும்புவார்கள், அவர் மீண்டும் அவர்களுக்கு உதவுவார். இது பல முறை மீண்டும் மீண்டும் நடந்தது.

இராஜாக்களின் காலம் முடிவுக்கு வந்தபோது, கெட்ட மற்றும் நல்ல இராஜாக்களின் கீழ் பல கீழ்படியாமை மற்றும் மீட்பின் காலத்திற்கு பிறகு, யோசியா இராஜா ஒரு பெரிய சீர்திருத்தத்தை நடத்தினார். தங்கள் முதாதையர்களை எகிப்திலிருந்து விடுவித்து, அவர்களை தொடர்ந்து பராமரித்த மாபெரும் தேவனை யோசியா இராஜா ஜனங்களுக்கு நினைவுபடுத்தினார். இந்த மறுமலர்ச்சியை 2 இராஜாக்கள் 23:22 ல் படிக்கலாம்.".

"(2 இராஜாக்கள்23:25) என்று இராஜாவாகிய யோசியாவைப் பற்றி நாம் வாசிக்கிறோம்.

சில சமயங்களில், பெற்றோர்கள், சத்தியத்தின் தரத்தை உயர்வாக பற்றியிருந்ததை போல, இன்றைய

இளை தலைமுறையினர் இல்லாததை நாம் பார்க்கும் போதும் அல்லது அவர்களுக்கு முன் இருந்தவர்களைப் போல வைராக்கியமுள்ளவர்களாக இல்லாததை நாம் பார்க்கும்போதும். நாம் நம்பிக்கையை இழக்க நேரிடும். இருப்பினும், யோசியா இராஜாவிடம் இது ஒருபோதும் தாமதமாகவில்லை என்பதை நாம் காண்கிறோம். தேவன் தனது நோக்கங்களைத் தொடர பிரதிநிதிகளை எழுப்புவார்.

**நிஜமான ஆட்டுக்குட்டியாகிய இயேசு**

இன்னும், இஸ்ரயேல் தேசம் தங்கள் விடுதலையையும், பஸ்காவையும் தேவனுடைய கட்டளைகளையும் மீண்டும் மறக்க அதிக நேரம் எடுக்க வில்லை. 600 ஆண்டுகளுக்குப்பிறகு, மனந்திரும்புதலுக்காக தேசத்தை மீண்டும் அழைக்கவும், இயேசுவை நிஜமான பஸ்கா ஆட்டுக் குட்டியாக கொடுக்கவும், தேவன் தனது ஒரே பேரான குமாரனை அனுப்பினார். அதே இரவில் இயேசு தனது நான்காவது பஸ்காவை சீஷர்களுடன் அனுசரித்தார், "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" (லூக்கா22:19) என்று கூறி, அவர் கடைசி இராபோஜனத்தை தொடங்கினார்.

உலகின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி என்று இயேசுவைப் பற்றி யோவான் அறிவித்தார். (யோவான்1:29) பாவத்திற்காக பஸ்கா ஆட்டுக்குட்டி வழங்கப்படவில்லை என்றாலும், அதன் மரணம் இயேசுவின் மரணத்தை அடையாளமாக காட்டுகிறது. எகிப்து தேசத்தைப் போலவே, தேவனுடைய ஜனங்கள் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத் தனத்திலிருந்து உண்மையிலேயே விடுவிக்கப்படக் கூடிய நேரம் வந்துவிட்டது. அவருடைய வார்த்தைகளை கேட்டு, அவைகளுக்கு கீழ்படிவோர் நியாயத்தீர்ப்பினின்று மரணத்திலிருந்து ஜீவனுக்கு கடந்துச் செல்வார்கள். (யோவான்5:24)

நீதிமானாக்கப்பட்ட நிலையையும், இறுதியில் விடுதலையையும் தரக்கூடிய விலைமதிப்பற்ற ஆட்டுக் குட்டியின் இரத்தத்தை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு உண்மையான இஸ்ரயேலரின் இருதயத்தில் வந்த மகிழ்ச்சியை கற்பனை செய்து பாருங்கள். இறுதியாக ஜனங்கள் சுதந்திரமாவார்கள். இந்த உலகில் அவர்களை தடைச் செய்வதற்கு எதுவும் இல்லை, அவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையைத் தந்தவரிடமிருந்து அவர்களைத் திருப்பிவிடுவதற்கும் எதுவும் இல்லை. இஸ்ரயேல் தேசத்திற்கு நிகழ்ந்த அதே மாதிரியை நாம் இங்கும் காண்கிறோம். இயேசுவின் வாழ்க்கையால், தனிப்பட்ட முறையில் தொடப்பட்ட தலைமுறை, தேவனுடைய வார்த்தையின் மீது ஆர்வமும், உற்சாகமும் நிறைந்ததாகவும், எந்தவொரு உபத்திரவத்தின் மத்தியிலும் விடாமுயற்சியுடன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களை, தனிப்பட்ட அனுபவத்தின் தொடர்பை இழந்த தலைமுறையினரால் பின்பற்றப்பட்டது, அவர்களின் நம்பிக்கை வெறுமனே ஒரு பாரம்பரியமாக இருந்தது. "மனிதர் நித்திரை (அப்போஸ்தலர்களும், ஆரம்பகால விசுவாசிகளும்) செய்த போது (மத்தேயு13:25), அதாவது அடுத்தடுத்த தலைமுறை விசுவாசிகளிடையே ஆவிக்குரிய நித்திரை காணப்பட்ட போது இது நடக்கத் தொடங்கியது. (1கொரிந்தியர் 11:30)

கிறிஸ்தவ அமைப்பைக் குணப்படுத்த தேவன் பல சீர்திருத்தவாதிகளை எழுப்பினார், ஆனால் சுவிசேஷ யுகத்தின் முடிவின் அறுவடை காலம் வரையில் சத்தியம் இன்னும் தெளிவாக காணப்படவில்லை. தேவன் இஸ்ரயேலில் யோசியாவை எழுப்பியதைப் போல, விசுவாசத்தின் உண்மையான அர்த்தத்தை வெளிப்படுத்தவும், கிறிஸ்துவின் தரத்தை உயர்த்தவும், தேவனுடைய ஜனங்கள் நிஜமான பாத்திரத்திலிருந்து பருகவும், புளிப்பில்லா அப்பத்தை புசிக்கவும், நித்தமும் ஜீவ பலியாக இறப்பதற்கும் (ரோமர்12:1) தேவன் ஒரு தூதனை எழுப்பினார். ஒவ்வொருவருடைய இருதயமும் தொடும்படியாகவும், அதைப் பற்றிக்கொண்டு தொடர்ந்து வாழ்ந்து, நற்செய்தியை நல்ல விஷயங்களாக பரப்பும் படியாக, சத்தியத்தின் செய்தி மிகவும் சக்திவாய்ந்ததாக மாறியது.

**நினைவு கூருதலின் கொள்கைகள்**

கிறிஸ்துவ யுகத்தின் முடிவை நாம் நெருங்கும் போது, தேவனுடைய தரநிலைகள் மற்றும் கொள்கைகளின் மேலுள்ள வைராக்கியம் குறைந்து போகாதபடிக்கு நம்மை காத்துக்கொள்ளவேண்டும். நாம் இஸ்ரயேலில் இருந்து படிப்படினைகளை எடுத்து, அவற்றை நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தவேண்டும். பாவம் மற்றும்

மரணத்திலிருந்து மாபெரும் விடுதலையை அளித்த நம்முடைய இரட்சகரை நினைவுகூர்ந்து, அநுசரிப்பதற்கான காலத்தை நாம் நெருங்குகையில், நம்மை நாம் சோதித்து பார்க்கவேண்டும்.

*ஒவ்வொரு ஆண்டும் நம் ஆண்டவருடனும், அவருடைய ஜனங்களுடனும் நாம் அதிகதிகமான நெருக்கத்தையும், ஐக்கியத்தையும் உணர்கிறோமா? அல்லது ஒவ்வொரு ஆண்டும் நினைவுக்கூருதலின் அநுசரிப்பு ஒரு பாரம்பரியமாக மாறிவிட்டதா?

*நம்முடைய நீதிமானாக்கப்பட்ட மனித இயல்பை, நாம் தொடர்ந்து பலிசெலுத்தும்போது, நம்முடைய ஆண்டவரின் பலியையும், அவரைப் பின்பற்றுவதற்கான அழைப்பையும் நாம் அதிகதிகமாக புரிந்து பாராட்டுகிறோமா?

*பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து சிருஷ்டிகர் நம்மை எவ்வாறு விடுவித்தார் என்பதையும், நிஜமான ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் நாம் எப்படி கடந்து வந்தோம் என்பதையும் நாம் தியானிக்கிறோமா ?" (1யோவான் 3:14)

யூதர்களுக்கான பஸ்கா பண்டிகை, கட்டாயமாக அனுசரிக்கப்பட வேண்டிய ஒரு கட்டளை. அதை விட்டுவிடக்கூடாது. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் பஸ்காவை அனுசரிக்காமல் தவிர்ப்பதற்கு இரண்டு காரணங்கள் மட்டுமே இருந்தன: இறந்த உடலினால் அவர்கள் அசுத்தமாக இருந்தால், அல்லது அவர்கள் நீண்ட பயணத்தில் இருந்தால். (எண்ணாகமம் 9:10) அப்போதும் கூட, ஒரு மாதத்திற்குப் பிறகு அவர்கள் அதைக் கடைப்பிடிக்க வேண்டும். "ஒருவன் சுத்தமுள்ளவனுமாய்ப் பிரயாணம் போகாதவனுமாயிருந்தும், பஸ்காவை ஆசரிக்காதே போனால், அந்த ஆத்துமா குறித்த காலத்தில் கர்த்தரின் பலியைச் செலுத்தாதபடியினால் தன் ஜனத்தாரில் இராமல் அறுப்புண்டுபோவான்; அந்த மனிதன் தன் பாவத்தைச் சுமப்பான்." (எண்ணாகமம் 9:13)

நம்முடைய கர்த்தரின் மரணத்தை நினைவுக் கூருவதிலும், இதே சிறத்தையை காட்டவேண்டும் என்று பவுல் கூறுகிறார். (1கொரிந்தியர் 11:28-30) ஞானஸ்நானத்தைத் தவிர, இயேசு நம்மை நினைவுக் கூரும்படி சொன்ன ஒரே சம்பவம், அவருடைய மரணத்தை நினைவுகூருதலாகும். "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்." (யோவான் 15:3)"ஒரு நபர் மற்றவர்களை சந்திக்க முடியாத அளவுக்கு சூழ்நிலைகள் ஏற்பட்டாலும் கூட, அவருடைய விசுவாசம், போதுமான பலத்தோடு வாக்குத்தத்தை கோரவேண்டும். அதாவது அவரும், கர்த்தரும் ஆக இருவர் அதை அனுசரிக்கவேண்டும் என்று நாம் ஆலோசனை கூறுகிறோம். இத்தகைய தவிர்க்க முடியாத தனிமை, பாவத்திற்கான மாபெரும் பலியின் வருடாந்திர அனுசரிப்பை எவரையும் தடுக்க அனுமதிக்கக்கூடாது என்று நாங்கள் அறிவுறுத்துகிறோம்" என்று பாஸ்டர் ரசல் எழுதுகிறார். (*The New Creation*, page 475).

இது நம் வாழ்க்கையில் நம்முடைய உணர்வு மற்றும் தினமும் நாம் வாழ்கின்றவற்றின் அடையாளமாகும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். நம்முடைய குறைபாடுகளை நாம் எவ்வளவு அதிகமாக உணர்ந்துகொள்கிறோமோ, அந்த அளவுக்கு நம் சார்பாக இயேசுவின் பலியின் முக்கியத்துவத்தையும், வழியில் அவருடைய உதவி நமக்கு எவ்வளவு தேவை என்பதையும் நாம் உணர்ந்துகொள்ளலாம். நம்முடைய இந்த பரப்பரப்பான வாழ்க்கையையும், நம்முடைய அன்றாட நடைமுறைகளையும் சற்று நிறுத்தி, நம்முடைய அர்ப்பணிப்பைப் பற்றி நியாயமாக யோசிக்கவேண்டும். இதுவே நமக்கு நினைவுகூருதலின் பொருளாக இருக்கவேண்டும். நம்முடைய மாபெரும் நோக்கத்தை, நம்முடைய அன்றாட வாழ்க்கை முறை மறைத்துவிடக் கூடாது. இந்த நிஜமான ஆட்டுக்குட்டியாகிய நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் பலி இல்லாமல், இந்த உபத்திரவமான உலகில் நமக்கு எந்த நம்பிக்கையும் இல்லை என்பதை நாம் உணர வேண்டும். இருப்பினும், அவர் வழியாக, "நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம்..." (எபிரெயர் 10:19,20) உண்டாயிருக்கிறது. நம்முடைய ஆண்டவரின் மரணம் நம் வாழ்க்கையின் போக்கை எவ்வாறு மாற்றியது என்பதை நாம் உணரவேண்டும்.

நம்முடைய கர்த்தர் நமக்காக செய்ததை நாம் நினைவில் கொள்ளும்போது, இயல்பாகவே நாம் அவர் பின்பற்றிய வாழ்க்கைமுறையில் நம்மை ஈடுபடுத்துவதன் மூலம் நம்முடைய புரிதலையும் பாராட்டையும் காண்பிக்க

விரும்புகிறோம். "பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம். "(2கொரிந்தியர் 5:15) "அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். "(மத்தேயு 16:24)

**மாறுவதற்கான ஓர் அழைப்பு**

யூதர்களுக்காக ஸ்தாபிக்கப்பட்ட பஸ்கா ஒரு பெரிய மாற்றத்தைத் தொடங்கியது. தேசம் ஒரு அடிமைத்தன வாழ்க்கையிலிருந்து உண்மையான மற்றும் ஜீவனுள்ள தேவனை சேவிக்கும் ஒரு வாழ்க்கையை நோக்கி நகர்ந்தது. இங்கு அவர்களின் வாழ்க்கை அந்நிய சாம்ராஜ்யத்திற்கான வேலையைச் சார்ந்திருந்தது. அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டார்கள். அவர்கள் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படிந்து, அவர்கள் அவரோடு செய்த உடன்படிக்கையில் விசுவாசமுள்ளவர்களாக காணப்பட்டால், சகலமும் அவர்களுக்கு வழங்கப்படும்.

நமக்கும் இதே போன்ற அழைப்பு உண்டு. மனித நம்பிக்கைகள், லட்சியங்கள் மற்றும் தற்காலிக இன்பங்களை விட்டு வெளியேற நாமும் அழைக்கப் பட்டிருக்கிறோம். (ஏசாயா45:10) "ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்." (பிலிப்பியர்3:7,8) என்று பவுலைப் போல, நாமும், உணரவேண்டும். பரலோக நகரமாகிய, வேறொரு வீட்டைத் தேடும் அந்நியர்களும், பரதேசிகளும் என்று நாம் அழைக்கப்படுகிறோம். (எபிரெயர்13:14,12:22) "பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்சஇச்சைகளை விட்டு விலகி,"(1பேதுரு2:11) என்று பேதுரு நமக்கு நினைவூட்டுகிறார்.

இஸ்ரயேல் தேசம் யெகோவா தேவனால் கற்பிக்கப்பட்டு சோதிக்கப்பட்டது. அவர்களின் வனாந்திர பயணம் பல தோல்விகளைக் கண்டது. ஆனால் எகிப்திலிருந்து வெளியேறிய இரண்டு பேரை தவிர அந்த சந்ததியில் மற்ற அனைவரும் வனாந்திரத்தில் மரித்து போனபின், தேசம் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் பிரவேசித்தது. தேசம் தன்னை நிரூபிக்க நாற்பது ஆண்டுகள் போதுமானதாக இருந்தது, பின்னர் அவர்கள் ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமாக இருந்தது. இதேபோல், சபையும் ஒரு வனாந்திரபயண அனுபவத்திற்குள் கடந்து சென்றபின், இறுதியாக வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு வந்துசேரும். "ஆகையால்? மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்."(எபிரெயர் 10:35)

இங்கு, சுவிசேஷ யுகத்தின் முடிவில், வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க நாம் ஆயத்தமா? நாம் அவரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறோமா ? நம்முடைய வாழ்க்கையில் அவருடைய அங்கீகாரத்தை உணர்கிறோமா ? நாம் உண்மையான பஸ்கா அனுசரிப்பின்படி வாழ்கிறோமா ? அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றி நித்தமும் நாம் மரித்துக்கொண்டிருக்கிறோமா?

"நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும்? நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பேறவும் உங்களால் கூடுமா என்றார்" (மத்தேயு 20:22) என்று இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடம் கேட்டார். அந்த எந்த தயக்கமும் இல்லாமல், "எங்களால் கூடும் " என்று பதிலளித்தார்கள். அதேபோல, நமக்காக அவர் செய்த நன்மைகளை பார்த்தபோது, "ஆம், எங்களால் கூடும்" என்று பதில் அளித்தோம். எதை எதிர்நோக்கவேண்டும் என்று அப்போஸ்தலர்கள் அறியாதிருந்தார்கள், ஆனால் பரிசுத்த ஆவியின் பலத்தால், இறுதி வரையில் அவர்கள் விசுவாசத்தில் உறுதியோடு இருக்கவேண்டும் என்ற தீர்மானமும், விருப்பமும் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பற்றிய உதாரணம் நமக்காக தேவனுடைய வார்த்தையில் விவரிக்கப்பட்டுள்ளது. அதேபோல், நாம் அவரிடம் நெருங்கி வருகையில், மிகவும் கடினமான வழி வந்துவிட்டதாக தோன்றலாம். சாத்தானின் தாக்குதல்களுக்கும் சோதனைகளுக்கும் எதிராக நாம் நிற்போம்.

அர்ப்பணிப்புக்கான நம்முடைய பொருத்தனைகளை நாம் புதுப்பிப்போம், நம்முடைய இரட்சிப்பு நிறைவேற அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் பிரயாசப்படுவோம். (பிலிப்பியர் 2:12) பாவத்தின் ஒவ்வொரு சிறிய தோற்றத்தையும் நம் வாழ்விலிருந்து அகற்றி தூய்மைப்படுத்தி, அவர் பரிசுத்தராக இருப்பது போல

நாமும் பரிசுத்தமாக இருப்போம். இந்த உலகில் கிறிஸ்துவின் முன்மாதிரிகளாகவும், நல்ல தூதர்களாகவும் இருப்போம். நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளையும், அப்போஸ்தலர்களின் வார்த்தைகளையும் எப்போதும் நம்முடைய சிந்தையில் வைத்திருப்போம். "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். என்றார்." (யோவான் 16:33) "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." (1யோவான் 2:1)

நம்முடைய பூமிக்குரிய வாழ்க்கை முடிவுக்கு வருவதால், "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்," (2தீமோத்தேயு 4:7) என்று நாமும் அப்போஸ்தலருடன் சேர்ந்து சொல்ல ஆயத்தமாக இருப்போம். "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே." (யோவான்6:68) என்று அப்போஸ்தலனாகிய பேதுருவோடு, நாம் ஒருமித்து குரல்களை உயர்த்தி கூறுவோம்.

### சிலுவை சுமத்தல்

# சிரோனே ஊரானாகிய சீமோன்



*David Hrechuk*

"போகையில் சிரேனே ஊரானாகிய சீமோன் என்னப்பட்ட ஒரு மனுஷனை அவர்கள் கண்டு, அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம் பண்ணினார்கள்."

(மத்தேயு 27:32)

நமது கர்த்தரின் சிலுவை அனுபவம் சார்ந்த ஒரு சிறிய விளக்கம் - "சிரேனே ஊரானாகிய சீமோன் கர்த்தர் இயேசுவின் சிலுவையைச் சுமந்தது.." மூன்று சுவிசேஷங்களிலும் இச்சம்பவமானது ஏன் பதிவு செய்யப் பட்டுள்ளது? என்ற கேள்விக்கு இட்டுச் செல்வதாக இருக்கிறது. இங்கே சில சம்பவங்களிலிருந்து பாடங்களை தியானிக்கலாம் என நாம் ஆலோசனை கூறுகிறோம்.

அனைத்து எழுத்தாளர்களும் தங்கள் கதைக்குச் சுற்றியுள்ள உண்மைகளை தங்கள் சொந்தக் கண்ணோட்டத்திற்கு ஏற்ப சேர்க்க அல்லது விலக்க முனைகிறார்கள். அவை எழுத்தாளர்களின் பார்வையில் கதைகள் மேம்படுத்தபட்டு குறிப்பிடப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, விவரிக்கப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கு காரணிகளாக இருந்தால் மட்டுமே ஒரு நாள் வெயில் அல்லது மழை என குறிப்பிடப்பட்டு விளக்கமளிக்கப் படலாம். மூன்று சுவிசேஷ எழுத்தாளர்களும் இயேசு தம்முடைய சிலுவையைச் சுமக்க உதவியதாக பதிவு செய்தது பொருத்தமானது. நாம் இந்த விவரத்திலிருந்து எதைப் பெற வேண்டும் என்று மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா விரும்பினார்கள்?

ஒவ்வொரு சுவிசேஷத்தில், ஒரு வசனத்திலே அவர் பெயர் சீமோன் என்று நமக்கு கூறப்படுவதுடன், அவர் உண்மையில் சிரேனியு நாட்டிலிருந்து (தற்பொழுது லிபியா) வந்தவர் எனவும் கூறப்படுவதுடன், அவர் கல்வாரி செல்லும் ஒரு பகுதி வரையிலும் போர்வீரர்களால் இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி வற்புறுத்தப்பட்டார் எனவும் நாம் அறிந்துள்ளோம். இச்சம்பவத்தினை யோவான் உபதேசத்தின் வரிசையில் தெளிவாகச் சுட்டிக்காண்பித்து விளக்கமளிக்கிறார். மற்றும் "அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு" யோவான் 19:17 ல் இவ்வாறாகக் கூறுகின்றார். "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களை சுமந்தார்." என்பதிலிருந்து இயேசு தாமே தனிமையில், இருந்தார். என்பதை நாம் ஆவிக்குரிய வகையில் புரிந்துகொள்ள முடிகிறது. ஏசாயா 53:4 நமது கர்த்தரின் தியாகப்பலிக்கும் சிரேனே ஊரானாகிய சீமோனின் செயல்பாடுகளுக்கும் ஒரு தொடர்பும் இருக்கவில்லை. ஆகவே மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகியோரின் எழுத்துக்கள் எந்தக் கோணத்தில் எழுதப்பட்டிருக்கக்கூடும்?

அவர் கடைசி முறையாக எருசலேமில் பிரவேசிக்கையில், அவர் தமது ஊழியத்தின் புதிய சட்டத்தில் பிரவேசித்தார். அவருடைய பிரதான ஊழியமானது தேவனுடைய இராஜ்யத்தை இஸ்ரயேல் தேசமுழுவதிலும் அறிவிப்பதேயாகும். அவர் வெகு நாட்கள் விடுபடப் போவதின் காரணமாக தமது பின்னடியார்களைத் தயார் செய்வதே தற்சமயம் அவருடைய நோக்கமாக இருந்தது. கர்த்தர் இயேசுவின் அநேக போதனைகள் மற்றும் அனுபவங்கள் தற்போதுள்ளதைக் காட்டிலும் பரந்த பயன்பாட்டினை கொண்டவையாகும். அவைகள் சுவிசேஷ யுகத்தினை நோக்கி சுட்டிக்காண்பிப்பவையாக இருந்தன. சீமோன் கர்த்தர் இயேசுவின் சிலுவையை சுமந்ததின் நோக்கத்தை நாம் அறியும்படியாக சுவிசேஷச எழுத்தாளர்கள் விரும்புகின்றனர்.

#### மூன்று கேள்விகள் ஆலோசிக்கப்படுகிறது

(1) அவருடைய பின்னடியார்களுக்கும் கர்த்தர் இயேசுவின் இவ்வனுபவங்களிலிருந்து எந்த நோக்கில் பாடங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடும் ? ஒவ்வொரு சுவிசேஷத்திலும் சீமோன் சிலுவையை சுமக்கம்படியாக வற்புறுத்தப்பட்டார் என்பதே இக்கதையின் பகுதி விளக்கமாகும். கூட்டத்தில் ஏதேனும் ஒருவரைப் பிடிக்கையில், அவர் சீமோனாக இருப்பதுடன் மற்றும் இச்சம்பவமானது வெறுமனே தற்செயலாக நடந்த ஒன்றாகக் கருதும்படியாகத் தோன்றுகிறது. போர் வீரர்களின் ஆணையிடுதல் அல்லது இவ்விஷயத்தில் சீமோனின் மனநிலைமைப் பற்றியும் நமக்கு ஏதும் கூறப்படவில்லை. இக்காட்சியானது சீமோனையல்ல, ஆனால் இயேசுவையே நோக்கமாகக் கொண்டுள்ளதாக

விருக்கிறதாக நமக்கு அறிவுறுத்தப்படுகிறது. கர்த்தர் இயேசு மிக பலவீனமடைந்தபடியினால், அவரால் சிலுவையைச் சுமக்க முடியாத வகையில் வெகு பாரமாக இருந்தபடியால், அவர் தமது பாதையை முடிக்கும் வகையில் உதவியளிக்கப்பட்டது. அவர் தமது ஜீவனை பலியாக செலுத்தும் செயல்பாடானது தொடர்ந்தது. வலி, தாகம், கேலி, அவமானம், ஆகியவற்றை உடையவராக தேவனை நோக்கிக் காத்துக் கொண்டிருந்தார். கர்த்தர் இயேசுவின் சிலுவையை சுமக்கம்படியாக பெற்றுக் கொண்டது. அவர் தம் ஜீவனை முழுவதுமாக பலியாக செலுத்த உதவிகரமாக இருந்தது. இயேசு தமது சிலுவையை அதன் பாரத்தை சுமக்க இயலாமல் போனதன் காரணம் அவிசுவாசம் அல்லது அவரது உடன்படிக்கை நிறைவுசெய்வதில் குறைவுபட்டிருப்பதாக ஏற்கப்படாது என்பது தெளிவாகக் காணப்படுகிறது. இதற்கு மாறாக நமது கர்த்தர் இயேசுவாகி தலைக்கு எவ்வாறு உதவி அவசியமானதாகயிருந்ததோ, அதுபோல சரீரமாகிய சபையின் ஒவ்வொரு அங்கங்களுக்கும் தங்களது சகோதரர்களிடமிருந்த தங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதி செய்யும் வகையில் உதவி அவசியமானது. எடுஜதுக்காட்டான உண்மையாகும். சீஷர்களுக்கு "கிறிஸ்துவின் சரீரம்" என்கின்ற கருத்தானது புதிய சிந்தையாக இருந்தது. யோவான் 13:34- "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" என கர்த்தர் இயேசு இராபோஜனவேளையின் பொழுது மாத்திரமே இவ்வாறாகக் கூறியிருந்தார். சிலுவை சுமத்தல் என்பது நம்மில் ஒருவராகிலும் நமது கர்த்தரின் ஸ்தானத்திலிருந்து ஜீவனை பலியாக செலுத்த முடியாதென கற்பிப்பதுடன், மற்றும் நமது ஜீவனை நமது சகோதரர்களுக்காக பலி செலுத்த வேண்டுமென்பது அவரது பன்னடியார்களுக்கான சிலாக்கியமாகும். நாம் ஒருவருக்கொருவர் சார்ந்திருப்பதை முன்னிலைப் படுத்துவதற்காக சுவிசேஷ எழுத்தாளார்கள் இந்த சம்பவத்திற்கு ஏன் கவனத்தை ஈர்த்தார்கள் என்பதை நாம் காணலாம்.

(2)நம் வாழ்வில் சகோதரர்களின் அவசியத்தை நாம் அங்கீகரிக்கிறோமோ? கிறிஸ்துவின் சரீரத்தில் நமது கர்த்தருடனான நமது உறவினர்களின் நிலையானது நேர்மை வாய்ந்ததாக இருக்கிறது. நமது பரலோகப் பிதாவின் ஏற்பாட்டிற்கு புறம்பாக நாம் அவருடன் ஒரு முழுமையான உறவுகொள்ள முடியாது. நாம் ஒவ்வொருவரும் சரீரத்தின் தனிப்பட்ட அங்கங்களாக இருக்கிறோம் என அப்போஸ்தலன் பவுல் 1கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் கூறுகிறார். நாம் ஒருவரும் சுதந்திரமாக செயலாற்ற முடியாதென எடுத்துக் காட்டாக குறிப்பிடுகிறது.

நம்முடைய உதவிக்காக சகோதரர்களை எதிர்பார்ப்பதில் நமக்கு கடினமாக இருந்தால், "இது பாதிப்படைந்த நிலையை சகோதரர்களுக்கு முன் வைப்பதை தடுக்கக்கூடிய ஆவிக்குரிய பெருமையின் ஒரு பகுதியாக இருக்கக்கூடுமா ? "என்ற கேள்வியை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். அப்படியென்றால், நமது கர்த்தரும் கூட அவரது சிலுவையை சுமக்கும் பொழுது உதவி தேவைப்பட்டதென நாம் அறிந்துகொள்ள வேண்டும். கிறிஸ்துவின் அடியாராயிருக்கும் அனைவரும் இவ்வாறாக (தங்களது) அவருடைய சிலுவையை சுமக்க வேண்டும். (மத்தேயு 16:24) நமது கர்த்தருக்குள்ளான அடையாளமான சிலுவையை நாம் அனைவரும் சுமக்கக்கூடுமா? நமது பெலத்திற்காக சகோதரர்களை நம்புவதற்கு ஒரு நடைமுறை பழக்கமும் உள்ளது. நாம் ஒருவரோடொருவர் தொடர்புக்குள் இருப்பதையே இது குறிப்பாக உள்ளது. "நம் வாய்ப்புக்களை முழுமையாக நாம் பயன்படுத்துகிறோமா?" என நம் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்க விரும்பும் ஒவ்வொருவரும் வேதவாக்கியம் சொல்லுகிறபடி இவ்வாறாக நம்மை நாமே பார்த்து கேட்டுக்கொள்ள வேண்டும். ஒருவேளை நாம் நம் மாம்சத்தில் நமது சகோதரர்களின் அருகாமையில் இருப்போமெனில், "நாம் நமது சகோதரர்களின் அருகாமையில் இல்லாவிடில் நாம் மற்ற பிற வழிகளைக் கொண்டு அவர்களுடன் தொடர்பிலிருக்கலாம். இது விசுவாசிகளின் சமூகத்திற்கு மட்டுமல்ல, குடும்பத்தை நம்புவர்களுக்கும் சொந்தமானது என்பது எப்படிப்பட்டதொரு பாக்கியம், சகோதரர்களிடம் நாம் நமது அன்பைப் பரிமாற்றம் செய்வது நமது சொந்த இடத்திலேயே அவ்விடத்திலேயே நாம் மதிப்பிடப் படுகிறோம், மற்றும் வெற்றியடைகிறோம் அல்லது நமது பின்னடைவினை நாம் புரிய முடிகிறது." அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும். ரோமர்

15:1 என்றவாறு நாம் சகோதரத் துவத்தினுள் தான் தேர்ச்சி பெற வேண்டும். சில வேளைகளில் நாம் பெலமுள்ளவர்களாகவும், மற்றும் பெலனற்றவர்களாகவும் கூட காணப்படுகிறோம். ஆனால் எவ்வாறான நிலையிலும் நாம் நம்மைக் கண்டறிந்தவர்களாக யிருப்போமாயின், நாம் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக செயலாற்றக்கூடும்.

(3)சகோதரர்களுக்கு உதவுவதன் மூலம் நான் குறிப்பாக என்ன செய்ய முயற்சிக்கிறேன்? சீமோன் கர்த்தர் இயேசுவின் சிலுவையை எடுத்துப் போடவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இயேசு சிலுவையிலேயே மரித்துவிடாமல், தொடர்ந்து சிலுவையை சுமக்க சற்று உதவினார். அதுபோல, நாமும் கூட நமது சகோதரர்களுடைய வாழ்வில் வரும் சோதனைகளை எடுத்துப்போட முயற்சிக்கக் கூடாது. அதற்குப் பதிலாக நமது சகோதரர்களுக்க வரும் பாடுகளின் பாரத்தை அவர்கள் எதிர்த்துப் போராடிடும் படியாக நாம் உதவிட வேண்டும். சகோதரர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய பிரச்சனைகளை எதிர்க்கொள்ள வேண்டும் என்பது அவர்கள் மனதில் இருக்க வேண்டிய முக்கியமான காரியமாகும்... அவர்களுக்காக நாம் அதை செய்யக்கூடாது. கர்த்தருடைய சீஷர்களில் யாரும் துன்பத்தைத் தவிர்க்க முடியாது. ஏனெனில் நாம் நமது செல்வாக்கை ஞானமாகப் பயன்படுத்தி பெருமுயற்சியுடன் நம் சகோதரர்களுக்கு உதவிட வேண்டும். அவர்களுடைய மேலான ஆவிக்குரிய விருப்பங்களை நோக்கியே நமது உள்ளணர்வானது எப்போதும் காணப்பட வேண்டும். அப்படியெனில் நாம் அதிகளவிலான வரையறையற்ற இரக்கத்தைக் காண்பிக்க வேண்டுமென்பது இதன் அர்த்தமல்ல. கிறிஸ்துவினிமித்தம் நாம் அநேக தருணங்களில் பாடுகளுக்குள்ளாக கடந்து சென்றிருக்கின்றோம். ஆனால் பல வேளைகளில் நாம் "மற்ற மனுஷர்களின் காரியங்களில் அலுவலாகயிருந்து பாடுபடுதல் கூடாது" (1தீமோத்தேயு 5:13)கிறிஸ்துவுக்குள்ளான பாடுகளில் இருப்பவர்களுக்கு சகோதரர்களின் உதவி அவசியம், மற்றும் பிற விஷயங்களுக்கு மதிப்பு வேறு வகைகளிலேயே தேவையாக இருக்கக்கூடும். சகோதரர்கள் உணரும் குற்ற உணர்ச்சியை நாம் தானாகவே முயற்சிக்கக்கூடாது என்பதில் நாங்கள் மிகவும் கவனமாக இருக்க விரும்புகிறோம். நம் மனதில் ஏதோ ஒரு பாரமான காரியமே குற்ற உணர்ச்சிக் குறியீடாக உள்ளது. சில விஷயங்களில் நாம் பிறரை புறக்கணிக்கும்படியாக ஊக்குவிக்கக் கூடாது. நம் கர்த்தருக்கு முன்பாக இப்படிப்பட்ட காரியங்களில் நாம் அவர்கள் ஊக்குவிக்க முறையாக அணுக வேண்டும்.

**சிலுவை சுமத்தல்**

சிலுவை சுமத்ததிலின் திறனை நான் எவ்வாறாக வளர்த்துக்கொள்ள வேண்டும்? என்ற கேள்வி இயல்பாகவே நம்மைத் தொடருகிறது. தாழ்மையே நம்மை வழிநடத்தும் கொள்கைகளில் ஒன்றாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறாக தமது மனப் பாங்கை சாட்சியாகக் கூறுகிறார். (1கொரிந்தியர் 9:20-22) யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப் போலவும், நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப் பட்டவனைப் போலவுமானேன் என்றார். பவுல் ஒவ்வொருவருடைய விதத்திற்கு ஏற்றவாறு தமது அணுகுமுறையை மாற்றிக் கொண்டார். சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நாம் வாஞ்சையுடன் நம்மை உட்படுத்திக்கொள்ள வேண்டும். வெவ்வேறு மனோபாவங்கள் மற்றும் வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்கள் காரணமானது அவர்கள் போராடும் போது ஒருவர் பலப்படுவதைக் காணலாம். நாம் உதவ முயற்சிப்பவர்களின் மனநிலையை நாங்கள் கருத்தில் கொள்ளவேண்டும் என்று ஞானம் ஆணையிடுகிறது. எங்கள் தகவல் தொடர்புகள், எங்கள் வார்த்தைகள் மற்றும் எங்கள் செயல்களை நாங்கள் தனிநபருக்கு ஏற்றவாறு மாற்ற வேண்டும். நான் இந்த சகோதரரனின் பாரத்தை அவரது கோணத்தில் பார்க்கிறேனா? என நம்மை நாமே கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டும். எங்கள் வார்த்தைகள் உண்மையாக இருப்பதால் அது அந்த நேரத்தில் ஆறுதலளிக்கும் என்று அர்த்தமல்ல அந்த அனுபவங்கள் நமக்கு அறிமுகமில்லாததாக இருந்தாலும், மற்றவர்களின் அனுபவங்களுக்குள் நுழையும் இதயத்திலிருந்து நமது அனுதாபம் நீடிக்க வேண்டும். விவேகமாக சிலுவை சுமத்தலில் பிறருக்கு உதவும் கொள்கையை மற்றொரு வழி நடத்தும் கொள்கையாகும். பேசுவதற்கு ஒரு நேரமும் பேசாமல் இருப்பதற்கு ஒரு நேரமும் இருக்கிறது. தவறான வார்த்தைகளே அவர்கள் பாடுகளை அதிகரிக்கச் செய்கிறது. அம்மாதிரியான சந்தர்ப்பங்களில் நாம் உணர்ந்து எதையும் கட்டாயமாக சொல்லிவிடக்கூடாது. சில சமயங்களில் நமக்காக ஜெபிக்கக்கூட வார்த்தைகளைக் கண்டுபிடிக்க முடியாது, அதே நேரத்தில் நம்முடைய புதிய சிருஷ்டி, "பரலோகத் தகப்பனால் மட்டுமே புரிந்துகொள்ளக்கூடிய " வார்த்தைகளை மிக ஆழமாக உறுமிக்கொண்டிருக்கும்"

என அப்போஸ்தலன் பவுல் எழுதுகிறார். (ரோமர் 8:26) அனுதாபத்தில் அமைதியாக உட்கார்ந்து, கைகளை இருக பிடித்தவர்களாக, அவர்களின் துன்பங்களுக்காக அழுது ஜெபிப்பது. இந்த சகோதரர்களை இன்னொரு நாள் தொடர்ந்து செல்ல உதவும். மற்ற சகோதரன் அநேக விதமான சோதனைகளில் காணப்படும் பொழுது அவர் தனது விசுவாசத்தின் உறுதியை தளர்த்தியிருக்கக் கூடும். அவர்களின் ஊக்கம் மற்றும் சந்தேகம் கொண்ட பேர்களின் வெளிப்பாடுகள் கண்டிப்பு மற்றும் அறிவுரைகளை சந்திக்க வேண்டிய அவசியமில்லை. சகோதரர்களை அத்தகைய சூழலில் அவர்களின் பிரச்சினைகளில் அவர்களை பலப்படுத்தி அவர்களை வேலை செய்ய வைப்பதே நமது வேலையாக உள்ளது. தெய்வீக ஞானத்தின் உதவியானது நமக்குக் கொடுக்கப்படாமல் நம்மால் அவர்கள் சந்தேகங்களுக்கு பதிலளித்து உதவிபுரிய முடியாது. மிகச்சிறியவர்கள் கூட இடறிவிடாதபடிக்கும் நாம் கவனமாக இருத்தல் வேண்டும். இது போன்ற சந்தர்ப்பங்களில் அமைதியாக இருப்பது பல தொகுதிகளை பேசுவதைப் போலவும், கவனமாக பேசுவது வெகுமதியாகவும் இருக்கும்.

மாம்சத்தின் மேல், புதுச்சிருஷ்டிக்கு ஒரு மாபெரும் செல்வாக்குள்ளதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். சரீர ரீதியான துன்பங்கள் மனதை மூழ்கடித்து ஆவிக்குரிய எண்ணங்களை பின்நோக்கி செல்ல துரிதப்படுத்தும். இதனால் மற்றவர்களுக்கு உதவுவதற்கான மற்றொரு அம்சம் தற்காலிக தேவைகளை நிவர்த்தி செய்வதாக இருக்கலாம். ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது.... சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன ? எவ்வாறாயினும், இது ஆவிக்குரிய உதவியாக இருக்க முடியாது ஏனெனில், இது மிகவும் முன்னறிவிப்பு மற்றும் விவேகத்துடன் செய்யப்பட வேண்டும். (யாக்கோபு 2:15-16) பிறருக்கு உதவ முயல வேண்டும் என்ற காரியமானது எப்பொழுதும் திட்டமிடப்பட்ட ஒன்றல்ல. நாம் சிரமங்களை மேற்கொள்ளும்போது என்ன செய்ய வேண்டும்? சகோதரர்களுக்கு உதவுவதற்கான எங்கள் முயற்சிகள் நல்ல வரவேற்பை பெறாதபோது அது ஊக்கமளிக்கும். சிலுவை சுமத்தலில் உதவி புரியும் திறனானது ஆவிக்குரிய முன்னேற்றமடைந்த முதிர்ச்சியைக் காட்டுகிறது உணர்வுகளானது புறக்கணிக்கப்படுவதற்கு பதிலாக, நமது கர்த்தர் பெற்ற அனுபவங்களையே ஒரு வாய்ப்பாக நமக்கும் பிறருக்கும் பொருத்திப்பார்க்க வேண்டும். நமது கர்த்தர் பெற்ற அதே பாடுகள் நம்மையும் நோக்கி வந்துகொண்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். சில பாடங்களை நாம் மேன்மைப் படுத்த நாம் சில காலங்கள் எடுத்துக்கொள்வதாக இருக்கும் தேவன் நம்மீது கொடுத்திராதபடியினால் நாமும் நமது சகோதரர்களுக்கு கொடுக்க முடியாது. நமது சகோதரர்களுடனான நமது நேர்காணலில் நாம் சரியான விதத்தில் மதிப்பளிக்கவில்லை என்பதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். சில வாரங்கள், மாதங்கள் அல்லது வருடங்கள் கடந்த பின்னர். அந்த வார்த்தைகளானது ஆசீர்வதிக்கப்பட்ட நினைவுகளாக செயல்பாடாக மாறி தற்பொழுது பலமளிப்பவையாக இருக்கின்றன. ஒரு சகோதரன் எப்பொழுதும் பிறர் வாழ்க்கையில் என்ன செல்வாக்கு உள்ளதென நாம் அறிய முடியாது, வெகுமதியையும் அங்கீகாரத்தையும் தேடாத சகோதரர்களின் இயல்பான அன்பின் விளைவாகும்.

சிலுவை சுமப்பதில் உதவிபுரிவது ஒரு விலையாக உள்ளது. அதற்கு நமது பெலத்தையும் நேரத்தையும் நாம் தியாகம் செய்ய வேண்டும். நாம் பிறரின் சுமைகளில் எடுத்துப் பங்கெடுக்கையில் நாமும் கூட அந்த நொறுக்கப்பட்ட பாரத்தின் கீழ் இருப்பவர்களாகிறோம். நம்முடைய இருதயம் அவர்களுக்காக பாரமாக இருக்கிறது. நமது மனங்களானது பிறரின் துன்பங்களில் கஷ்டம் அனுபவிக்கிறது. நாம் பிறரை பேணிக்காக்கும் பொழுது நமது பெலன் குறைபடுகிறது. இது நமது சகோதரர்களுக்காக நாம் பலியாகும்போது நமக்கு கிடைக்கப்பெறும் விளைவாகும். வாழ்க்கை முழுமையும் பழைய சிந்தையும் மற்றும் சரீரமும் செலவழிக்கப்பட்டு புதிய சிந்தையானது வளர்ச்சியடையும் வேலையாகும். சிந்தைக்கான உணவை வழங்கும். "சிரேனே ஊரானாகிய சீமோன் குறித்த இந்த நினைவுகூறுதலின் தியானத்திற்கு கடைசி அம்சமாக உள்ளது. மாற்கு சுவிசேஷத்தில் சீமோனின் மகன்களாக அலெஸ்சாண்டர் மற்றும் ரூபஸ் ஆகியோர். குறிப்பிடப்பட்டுள்ள இவர்கள் சகோதரர்களுக்கு நன்கு அறியப்படடவர்களாக இருந்திருக்கவேண்டும். "சிரேனே ஊரானாகிய சீமோன் நமது கர்த்தர் இயேசுவின் சிலுவையை சுமந்ததிநிமித்தமாக அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் ஒரு மாற்றம் நிகழ்ந்திருக்கக்கூடும் என்பது ஒரு உட்குறிப்பாகும். ஒரு வேளை, மற்றவர்களைப் போல இல்லாத ஒரு மனிதனின் மரணத்தை அவர் கண்டவுடன், அவர் தனது சொந்த சிலுவையை எடுத்துக்கொண்டு, தன்னை மறுத்து இயேசுவைப் பின் தொடர்ந்தார்.

### மீண்டும் மீண்டும் இழைக்கப்பட்ட அநீதி

# ஒரு இரவில் ஆறு விசாரணைகள்



*Jeff Mezera*

"அப்பொழுது அவர்கள் கேட்டுக்கொண்டபடியே ஆகட்டும் என்று பிலாத்து தீர்ப்பு செய்து.."
(லூக்கா **23:24**)

நினைவுகூருதலின் பாடங்களும், தியானங்களும், இராஜபோஜனத்தின் நிகழ்ச்சிகளையும், இயேசுவின் காட்டிக் கொடுத்தலையும், அவருடைய சிலுவை மரணத்தையுமே மையப்படுத்தி இருக்கும். ஆனால் இந்த நிகழ்வுகளுக்கு இடையில் சில விஷயங்கள் இருந்தது -- (கர்த்தருக்கு எதிராக காரியங்கள் எவ்வாறு வரிசையாக வைக்கப்பட்டது என்பதை காட்டும், பதற்றம் நிறைந்த வியத்தகு காரியங்கள் நடந்தன. dramatic scenes packed with suspense — that show how things were stacked against our Lord) ஆறு மணிநேரத்தில் ஆறு விசாரணைகள் நடந்தன, அவற்றுள் மூன்று மத ரீதியானதும், மூன்று அரசியல் ரீதியானதாகவும் இருந்தன. ஆனால் ஆறும் சட்டவிரோதமானவையே. கெத்செமனே தோட்டத்தில் கைது செய்யப்பட்டதிலிருந்து பன்னிரண்டு மணி நேரத்திற்குள், இயேசு சிலுவையில் அறையப்பட்டார்.

இயேசுவின் விசாரணைகள் சட்டவிரோதமானவைகள் என்பதற்கு அநேக காரணங்கள் உண்டு. சில வேதத்தின் அடிப்படையிலும், சில யூத மற்றும் ரோமானிய சட்டங்களின் அடிப்படையிலும், இந்த காரணங்களுள் சிலவற்றை நாம் முன்னிலைப்படுத்துவோம். இந்த ஆறு விசாரணைகளும் ஒரே இரவில் நிறைவடைந்ததை கவனியுங்கள்.

**விசாரணை ஒன்று - மத ரீதியான விசாரணை, முதலாம் கட்டம்:**

**12:30 AM:** முன்னாள் பிரதான ஆசாரியனான அன்னாவிற்கு முன்.

குற்றச்சாட்டு**:** முன் விசாரணை, பொய்க் குற்றச்சாட்டுகள்.

சட்ட நிலை - தனி மனித நீதிமன்றத்திற்கான எந்த விதமான ஏற்பாடுகளும் அங்கு இல்லை. அன்னா அப்போதைய பிரதான ஆசாரியனாக இல்லாததால், சட்டப்பூர்வ அதிகாரம் எதுவும் அவருக்கு இல்லை. இயேசுவின் மீது எந்த விதமான குற்றமும் சாட்டப்படவில்லை.

**வேதவசனங்கள்**

லூக்கா **22:54**

யோவான் **18:12-24**

**அன்னாவிற்கு முன்** யோவான் **18:12,13,19-24.** "அப்பொழுது போர்ச்சேவகரும், ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவனும், யூதருடைய

**ஒரே இரவில் நிறைவடைந்த ஆறு விசாரணைகள்**

1. **12:30 AM** - முந்தைய பிரதான ஆசாரியரான அன்னாவிற்கு முன்.
2. **1:00 - 2:00 AM** - அப்போதைய பிரதான ஆசாரியரான காய்பாவிற்கு முன்.
3. **4:30 AM –** (விடிவதற்கு முன்) - நியாய சங்கத்திற்கு முன்.
4. **5:00 AM**- பிலாத்துவிற்கு முன்.
5. **5:30 AM** -ஏரோதிற்கு முன்.
6. **6:00 AM** -மறுபடியும் பிலாத்துவிற்கு முன்.

ஊழியக்காரரும் இயேசுவைப்பிடித்து, அவரைக் கட்டி முதலாவது அவரை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அவன் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமனாயிருந்தான். பிரதான ஆசாரியன் இயேசுவினிடத்தில் அவருடைய சீஷரைக் குறித்தும் போதகத்தைக் குறித்தும் விசாரித்தான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்; ஜெபஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை. நீர் என்னிடத்தில் விசாரிக்க வேண்டியதென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை

அவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றார். இப்படி அவர் சொன்னபொழுது, சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன்: பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது என்று, இயேசுவை ஒரு அறை அறைந்தான். இயேசு அவனை நோக்கி: நான் தகாத விதமாய்ப் பேசினதுண்டானால், தகாததை ஒப்புவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய் என்றார்.பின்பு அன்னா என்பவன் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு அவரைக் கட்டுண்டவராக அனுப்பினான்." இயேசு காய்பாவினிடத்தில் அனுப்பப்படுவதற்கு முன்பு, இது ஒரு முன் விசாரணையாக இருந்தாலும், கிறிஸ்துவுக்கு எதிராக தவறான சாட்சிகளைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு முயற்சியாக இருந்தது. இயேசுவை அன்னாவிடத்தில் அழைத்துச் சென்றது சட்டவிரோதமானதாக இருந்தது. ஏனென்றால் அன்னா முன்னாள் பிரதான ஆசாரியர். அவர் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமனாயிருந்தார், எனவே இந்த விஷயத்தில் அவருக்கு சட்டப்பூர்வ அதிகாரம் இல்லை. அன்னாவிற்கு சட்டபூர்வமான அதிகாரம் இல்லை என்பதை தெரிந்திருந்த இயேசு, ஏன் தன்னை விசாரிக்கிறீர் என்று அன்னாவிடம் கேட்டார்.

விசாரணை இரண்டு - மத ரீதியான விசாரனை, இரண்டாம் கட்டம்.

1:00-2:00 AM: - அப்போதைய பிரதான ஆசாரியனான காய்பாவிற்கு முன்.

குற்றச்சாட்டு :தேவதூஷணம், தேவகுமாரன் என்று தன்னைத்தானே அழைத்துக்கொண்டது.

**சட்டங்கள்**

*விடிவதற்க்குள் நியாய சங்கம் ஒருபோதும் கூட்டப்பட கூடாது என்பதால், இது ஒரு சட்டவிரோதமான விசாரணை.

*பொய் சாட்சியம் அளிப்பது நியாயப்பிரமாணத்திற்கு எதிரானது, பிரதான ஆசாரியர்களும், வேதபாரகரும், மூப்பர்களும், இயேசுவின் போதனை குறித்து பொய்யான காரியங்களை கூறினார்கள். (ஒன்பதாவது கற்பனை, யாத்திராகமம் **20:16**. லேவியராகமம் **19:16-18**)

*ஒருவருக்கு எதிராக பொய் சொல்வதை தேவன் வெறுக்கிறார். (நீதிமொழிகள் **6:16-19**)

*சுய குற்றச்சாட்டின் அடிப்படையில் ஒருவரை தண்டிக்க முடியாது என்று சட்டம் கூறுகிறது. ஒருவருக்கு மரணத் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்றால் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகள் தேவை. கர்த்தருடைய விஷயத்திலும் இத்தனை சாட்சிகள் தேவைப்பட்டன.

*இந்த கொள்கையைப் பற்றி, ஒரு இடைக்கால சட்ட அறிஞர் இவ்வாறு கூறுகிறார் - "எவரும் தனக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டை முன்வைக்க முடியாது, இது நமது நீதித்துறையின் அடிப்படைக் கொள்கையாக உள்ளது". **(Maimonides, Sanhedrin, 4:2 — Mishna, in "Pirke Aboth" 4:8).**

வேத வசனங்கள்-

மத்தேயு **26:59-75**

மாற்கு **14:53-65**

லூக்கா **22:56-65**

யோவான் **18:24**

காய்பாவின் வீட்டில், நியாய சங்கத்திற்கு முன். மாற்கு **14:53-65** "இயேசுவை அவர்கள் பிரதான ஆசாரியனிடத்தில் கொண்டுபோனார்கள்; அங்கே ஆசாரியர் மூப்பர் வேதபாரகர் எல்லாரும் கூடிவந்திருந்தார்கள். பேதுரு தூரத்திலே அவருக்குப் பின்சென்று, பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் வந்து, சேவகரோடே கூட உட்கார்ந்து, நெருப்பண்டையிலே குளிர் காய்ந்துகொண்டிருந்தான். அப்பொழுது பிரதான ஆசாரியரும் ஆலோசனைச் சங்கத்தாரனைவரும் இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாகச் சாட்சி தேடினார்கள்; அகப்படவில்லை. அநேகர் அவருக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லியும், அந்தச் சாட்சிகள் ஒவ்வவில்லை. அப்பொழுது சிலர் எழுந்து, கைவேலையாகிய இந்தத் தேவாலயத்தை நான் இடித்துப்போட்டு, கைவேலையல்லாத வேறொன்றை மூன்று நாளைக்குள்ளே கட்டுவேன் என்று இவன் சொன்னதை நாங்கள் கேட்டோம் என்று, அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொன்னார்கள்.அப்படிச் சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வாமற்போயிற்று. அப்பொழுது பிரதான ஆசாரியன் எழுந்து நடுவே நின்று, இயேசுவை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான். அவரோ ஒரு உத்தரவும் சொல்லாமல் பேசாதிருந்தார். மறுபடியும் பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? என்று கேட்டான். அதற்கு இயேசு: நான் அவர் தான்; மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார். பிரதான ஆசாரியன் இதைக் கேட்டவுடனே,

தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு: இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? தேவ தூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது என்றான். அதற்கு அவர்களெல்லாரும்: இவன் மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்று தீர்மானம்பண்ணினார்கள். அப்பொழுது சிலர் அவர்மேல் துப்பவும், அவருடைய முகத்தை மூடவும், அவரைக் குட்டவும், ஞானதிருஷ்டியினாலே பார்த்துச் சொல் என்று சொல்லவும் தொடங்கினார்கள்; வேலைக்காரரும் அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள்."

கீழ்காணும் காரணங்களின் அடிப்படையில் இரண்டாவது யூத நியாயவிசாரணையும் சட்ட விரோதமானதாக இருந்தது.

(1) விடிவதற்குள் நியாயசங்கம் ஒருபோதும் கூட்டப்படக்கூடாது. "காலை பலிக்கு முன் நீதிமன்றத்தின் எந்த விசாரணையும் நடத்தக்கூடாது. ஒரு நீதிபதியாக செயல்படுபவர் முதலில் தேவனின் வழிகாட்டுதலை நாட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதே இந்த ஒழுங்கு முறைக்கான காரணம். இந்த விசாரணை அதிகாலை **1:00** மணி முதல் அதிகாலை **2:00** மணி வரை நடந்ததால், காலை பலிகளுக்கு இன்னும் சில மணிநேரங்கள் இருந்தன. அனைத்து உறுப்பினர்களும் இல்லாத சமயத்தில் இவர்கள் இரகசியமாக கூடினார்கள்.

(2) பொய் சாட்சியம் அளிப்பதை நியாயப்பிரமாணம் தடை செய்கிறது, மேலும் அந்த சங்கம் இயேசுவின் போதனைக் குறித்து பொய்யான காரியங்களை கூறியது. (யாத்திராகமம் **20:16**, லேவியராகமம் **19:16-18**) இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்பட வேண்டும் என்ற பிரமாணத்தை அவர் கொடுத்துள்ளார் (உபாகமம் **19:15**) சங்கத்தின் தலைமைக்கு வாக்களிக்கும் நியாயசங்கத்தின் உறுப்பினர்கள் மாத்திரமே அங்கு இருந்தார்கள். முரண்பாடாக, சங்கத்திற்கு முன் கொண்டுவரப்பட்ட சாட்சிகள் அவர்கள் கேட்டவைகளை கூட ஒப்புக்கொள்ள முடியவில்லை.

(3)சுய குற்றச்சாட்டு யூத சட்டத்திற்கு எதிரானது. "எவரும் தனக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டை முன்வைக்க முடியாது, இது நமது நீதித்துறையின் அடிப்படைக் கொள்கையாக உள்ளது." **(Maimonides, Sanhedrin, 4:2 - Mishna, in "Pirke Aboth" 4:8).**

விசாரணை மூன்று - மத ரீதியான விசாரிப்பு, மூன்றாம் கட்டம்

**4:30 AM :** நியாய சங்கத்திற்கு முன். குற்றச்சாட்டு**:** தேவதூஷணம், தேவகுமாரன் என்று தன்னைத்தானே அழைத்துக்கொண்டது. ரோம சட்டம் இந்த தூஷணத்தில் ஆர்வம் காட்டவில்லை.

**சட்டநிலை**

*பண்டிகை நாட்களில் நியாயசங்கம் விசாரணை நடத்துவது பிரமாணத்திற்கு எதிரானதாக இருந்தது. பஸ்கா பண்டிகை அப்பொழுது நடந்து கொண்டு இருந்தது. "அவர்கள் ஓய்வுநாட்களின் முந்தய நாளிலோ, பண்டிகை நாட்களிலோ நியாயவிசாரிக்க கூடாது." **(The Mishna, Sanhedrin, 4:1).**

*ஆலோசனை சங்க நடுவர் ஒரு குழுவினராக செயல்பட வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. இது நடக்கவில்லை. மிஷ்னாவில் உள்ள சட்டம இவ்வாறு கூறுகிறது - "நீதிபதிகள் தங்கள் மனசாட்சியின் நேர்மையுடன் எந்த விஷயத்தையும் எடைபோட வேண்டும்." **(Sanhedrin4: 5, (**உபாகமம் 13**:**14ஐக் காண்க)

*குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஆதரவாக ஒரு வழக்கறிஞர் இருக்க வேண்டும் என்பது சட்டத்தின் கட்டளை. இதுவும் நடக்கவில்லை.

*24மணிநேரம் கடந்த பின்பே மரணதண்டனை விதிக்கப்படவேண்டும் என்று சட்டம் கூறுகிறது. " மரண தண்டனை விதிக்கப்பட வேண்டுமானால், அது (ஒரு குற்றவியல் குற்றச்சாட்டை) அடுத்த நாளிற்கு முன் நிறைவேற்றப்பட முடியாது." என்று மிஷ்னா கூறுகிறது. (ஆளையே, Sanhedri 1)**.**

*"காலை பலிகள் விடியற்காலையில் வழங்கப்படுகிறது. அந்த நேரத்திலிருந்து ஒரு மணி நேரம் வரை நியாய சங்கம் கூட்டப்படக்கூடாது" (The Mishna in "Talmud, of the Perpetual Sacrifice," Chapter 3).

**வேத வசனங்கள்**

மத்தேயு **27:1-2**

மாற்கு **15: 1**

லூக்கா **22:66-71**

விடியற்காலையில் நியாய சங்கத்திற்கு முன். லூக்கா **22:66-71:** " விடியற்காலமானபோது ஜனத்தின் மூப்பரும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கூடிவந்து, தங்கள் ஆலோசனைச் சங்கத்தில் அவரைக் கொண்டு வந்து நிறுத்தி: நீ கிறிஸ்துவா? அதை எங்களுக்குச் சொல் என்றார்கள். அதற்கு அவர்: நான் உங்களுக்குச் சொன்னாலும்

நம்பமாட்டீர்கள்.நான் உங்களிடத்தில் வினாவினாலும் எனக்கு மாறுத்தரம் சொல்லமாட்டீர்கள், என்னை விடுதலைபண்ணவுமாட்டீர்கள். இதுமுதல் மனுஷகுமாரன் சர்வவல்லமையுள்ள தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார் என்றார். அதற்கு அவர்களெல்லாரும்: அப்படியானால், நீ தேவனுடைய குமாரனா என்று கேட்டார்கள். அதற்கு அவர்: நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர்தான் என்றார். அப்பொழுது அவர்கள்: இனி வேறு சாட்சி நமக்கு வேண்டுவதென்ன? நாமே இவனுடைய வாயினாலே கேட்டோமே என்றார்கள்."

மாற்கு **15:1:**"பொழுது விடிந்தவுடனே, பிரதான ஆசாரியரும் மூப்பரும் வேதபாரகரும் ஆலோசனைச் சங்கத்தாரனைவரும் கூடி ஆலோசனைபண்ணி, இயேசுவைக் கட்டிக்கொண்டுபோய், பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்."

கீழ்காணும் காரணங்களின் அடிப்படையில் மூன்றாவது நியாயவிசாரணையும் சட்டவிரோதமானதாக இருந்தது

(1)பண்டிகை நாளில் விசாரணை செய்வதை பிரமாணம் தடைசெய்கிறது. அது பஸ்கா பண்டிகையின் காலமாக இருந்தது." அவர்கள் ஓய்வுநாட்களின் முந்தைய நாளிலோ, பண்டிகை நாட்களிலோ நியாயம் விசாரிக்க கூடாமல் இருந்தது (The Mishna, Sanhedrin, 4:1).

(2) முன்பு கூறியது போல், ஆலோசனை சங்கம் காலை பலிகளுக்கு முன் கூட்டப்படக்கூடாது / (The Mishna in "Talmud, of the Perpetual Sacrifice," Chapter 3)காய்பாவிற்கு முன் நடந்த இயேசுவின் இரண்டாம் மத ரீதியான விசாரணைக்கு பிறகு சேவல் மும்முறை கூவிற்று. இது இரவு நேரத்தில் நடந்தது.(மத்தேயு **26:75**)

(3)நியாய சங்கம், நீதிமன்றத்தின் வழக்கறிஞராக அல்ல, நீதிபதியாக செயல்படவேண்டும் என்று சட்டம் கூறுகிறது. "நீதிபதிகள் தங்கள் மனசாட்சியின் நேர்மையுடன் எந்த விஷயத்தையும் எடைபோட வேண்டும்" **(Sanhedrin4: 5,** உபாகமம் **13:14**ஐக் காண்க,

(4) குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஆதரவாக ஒரு வழக்கறிஞர் இருக்கவேண்டும். இயேசுவிற்கு அப்படி யாரும் இருக்கவில்லை.

(5)விசாரணை முடிந்து 24 மணிநேரத்திற்கு பிறகே மரணதண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று மிஷ்னா (யூத வாய்வழி பாரம்பரியம்) கூறுகிறது. "மரண தண்டனை விதிக்கப்பட வேண்டுமானால், அது (ஒரு குற்றவியல் குற்றச்சாட்டை) அடுத்த நாளிற்கு முன் நிறைவேற்றப்பட முடியாது. **"(Mishna, Sanhedrin, 4:1)** இயேசு அதே நாளில் சிலுவையில் அறையப்பட்டார். அவர்கள் அவரை பஸ்காவுக்கு முன்பு கொலைச் செய்ய அவசரப்பட்டார்கள்.

(6)இயேசு தன்னை தேவனுக்கு சமமானவராக ஆக்கிக்கொண்டார் என்றும், அவர் தேவதூஷணம் செய்தார் என்றும் பொய்குற்றச்சாட்டுகளை சுமத்தினார்கள். ஆனால் உண்மையில், அவர் தேவன் தனது தந்தை என்று தான் கூறினார். இந்த மூன்று சட்டவிரோதமான மதம் அடிப்படியில் நடந்த விசாரணைகளை தொடர்நது, மூன்று அரசியல் ரீதியான விசாரணைகள் நடந்தன. அவைகளும் சட்டவிரோத மானவைகளா?

நான்காம் விசாரணை - அரசியல் ரீதியான விசாரிப்பு, முதல் கட்டம்

**5:00 AM:** பிலாத்துவிற்கு முன், தீர்ப்பு மன்றம்.

குற்றச்சாட்டு**:** தேசத்துரோகம். ரோம மரண தண்டனையை அளித்தது.

சட்ட நிலை

*"நியாய சங்கம் அதன் அமர்வுகளை நியமிக்கப்பட்ட இடத்தில் வைத்தால் மட்டுமே மரண தண்டனை விதிக்க முடியும்." **(Maimonides in Sanhedrin,14).** குற்றச்சாட்டானது தூஷணத்திலிருந்து தேசத்துரோகமாக மாற்றப்பட்டது. அவர்களின் குற்றச்சாட்டு**:**

*தேசத்துரோகம் - லூக்கா **23:2,**"இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட இராஜாவென்றும், இராயருக்கு வரிகொடுக்க வேண்டுவதில்லை என்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர்மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள்."

*தேசத்தைத் திசைதிருப்பல் - இராயனுக்கு வரி கொடுக்க மற்றவர்களைத் தடை செய்தல். தன்னை இராஜாவென்று கூறிக்கொள்ளுதல். சரியான தேதிக்கும், ஷோரர் **(Schürer) 352-353,**. எண் 42 ஐப் பார்க்கவும். பிலாத்து மதச் சட்டத்தைப் பற்றி சிறிதும் அறிந்திருக்கவில்லை. இயேசு நிரபராதி என்று பிலாத்து அறிந்திருந்தும் அவரை சிறையில் அடைத்தார்.

**வேதவசனங்கள்**

மத்தேயு 27: 2-14

மாற்கு 15: 2-5

லூக்கா 23: 1-6

யோவான் 18: 28-38

பிலாத்துவிற்கு முன், தீர்ப்பு மன்றம். யோவான் 18:28-38

"அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து இயேசுவைத் தேசாதிபதியின் அரமனைக்குக் கொண்டுபோனார்கள்; அப்பொழுது விடியற்காலமாயிருந்தது. தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதி பதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள். ஆதலால் பிலாத்து அவர்களிடத்தில் வெளியே வந்து: இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள் என்றான்.அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: இவன் குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம் என்றார்கள். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள் என்றான். அதற்கு யூதர்கள்: ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை என்றார்கள். தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறித்து இயேசு குறிப்பாய்ச் சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறத்தக்கதாக இப்படிச் சொன்னார்கள். அப்பொழுது பிலாத்து மறுபடியும் அரமனைக்குள் பிரவேசித்து, இயேசுவை அழைத்து: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான்.இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ என்றார்.பிலாத்து பிரதியுத்தரமாக: நான் யூதனா? உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள், நீ என்ன செய்தாய் என்றான். இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற் குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார். அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜா தான்; சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்.அதற்குப் பிலாத்து: சத்தியமாவது என்ன என்றான். மறுபடியும் அவன் யூதர்களிடத்தில் வெளியே வந்து: நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்."

இந்த நான்காவது விசாரணை அரசியல் ரீதியானதாக இருந்தாலும், அதுவும் சட்டவிரோதமாகவே நடத்தப்பட்டது.

(1)அனைத்து விசாரணைகளும் நியமிக்கப்பட்ட இடத்தில் நடத்தப்பட வேண்டும். பஸ்காவைப் அனுசரிக்கும் முன் தீட்டுப்படாமல் இருக்க, யூத தலைவர்கள் தேசாதிபதியின் அரமணைக்குள் பிரவேசியாதிருந்தார்கள். "நியாய சங்கம் அதன் அமர்வுகளை நியமிக்கப்பட்ட இடத்தில் வைத்தால் மட்டுமே மரண தண்டனை விதிக்க முடியும்" (Maimonides in Sanhedrin, 14). "மன்றத்தை விட்டு வெளியேறிய பிறகு, யாருக்கும் மரண தண்டனை வழங்க முடியாது" (Talmud, Idolatry, Chapter 1, Volume 8).

யூத சட்டத்தின் அடிப்படையிலும், ரோமானிய சட்டத்தின் அடிப்படையிலும் இந்த விசாரணை சட்டவிரோதமானதாக இருந்தது. பிலாத்து யூத மதச் சட்டத்தைப் பற்றி சிறிதும் அறிந்திருக்கவில்லை, அதை பற்றின அக்கறையும் அவருக்கு இல்லை, ஆனால் ரோமானியர்கள் தாங்கள் ஆட்சி செய்தவர்களின் சட்டங்களையும் கருத்தில் கொள்வது வழக்கம். "வழக்கிற்கு தேவை படுகிற விதத்தில், ரோமானிய ஆளுநர்கள், ரோமானிய அல்லது யூத சட்டத்தை அந்த வழக்கின் விவாதத்திற்கு பயன்படுத்தலாம். க்ரீனிட்ஜ் என்பவர், சிசேரியோஸ் டைம்ஸில் அவரது சட்ட நடைமுறையிலும், மற்ற அதிகாரங்களிலும் இவ்வாறே நிலைநாட்டுகிறார்கள்." (1914,Charles Edmund Deland,The MisTrials of Jesus,page172).

இந்த வழக்கு பல காரணங்களக்காக ரோமானிய சட்டத்தின்படி சட்டவிரோதமானது. எந்த சாட்சிகளும் அழைக்கப்படவில்லை. அப்போஸ்தலர் 25:16ல் பவுல் குற்றம் சாட்டப்பட்டபோது இந்த ரோமானிய சட்டத்தை கேள்வியாக எழுப்பினார். மேலும், ரோமானிய சட்டத்தின்படி, மரணதண்டனை விதித்து மூன்று நாட்களுக்கு பின்பே அந்த மனிதரை கொல்ல முடியும். ஆனால் இயேசு ஒரே நாளில் கொல்லப்பட்டார். குற்றச்சாட்டு எழுத்துப்பூர்வமாக இருக்கவேண்டும், மேலும் மூன்று வேலை நாட்களுக்கு மன்றத்தில் வெளியிடப்படும். மூன்றாம் நாள் வழக்கு விசாரணை முடிவுக்கு வரும்." **(Walter Marion Chandler, The Trial of Jesus from a Lawyer's Standpoint, Volume 2, pages 37,38, Colquhoon, Summary of the Roman Civil Law, Volume 3, Section 2451).**

ரோமானிய சட்டத்தின்படி, குற்றம் சாட்டப்பட்டவர் மூன்றாவது நாளில், "தனது வழக்கறிஞருடன் மேடை ஏறி, தன் சாா்பாக இருக்கும் ஆதாரங்களை காண்பித்து," தனது எதிர்வழக்கை முன் வைக்க முடியும். "பின்பு ஒரு

குறிப்பிட்ட நாளில் ஜனங்கள் தங்கள் வாக்குகளால் தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்வதாக வழக்கறிஞர் அறிவிப்பார். **(Id., pages 37,38, Colquhoon, Summary of the Roman Civil Law, Volume 3, Section 2451).**

(2)குற்றச்சாட்டானது தூஷணத்திலிருந்து தேசத்துரோகமாக மாற்றப்பட்டது. "இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட இராஜாவென்றும், இராயனுக்கு வரிகொடுக்க வேண்டுவதில்லை என்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர் மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள்." (லூக்கா **23:2**)

குற்றச்சாட்டு மாற்றப்பட்டதற்கு ஒரு காரணம் பிலாத்துவின் முடிவுகளை இயேசுவிற்கு எதிராக எடுக்க கட்டாயப்படுத்துவதற்காக. அவர் யூத மதச் சட்டத்தைப் பற்றி கவலைப்படவில்லை, ஆனால் குற்றச்சாட்டை மாற்றினால்பிலாத்துயூத சட்டத்தை அல்லாமல்ரோம சட்டத்தை பயன்படுத்தலாம், ஏனென்றால் தேசத் துரோகம் ரோமுக்கு எதிரான குற்றமாகும். இயேசு நிரபராதி என்று பிலாத்து அறிந்திருந்தும் அவரை சிறையில் அடைத்தார்.

ஐந்தாம் விசாரணை - அரசியல் ரீதியான விசாரிப்பு, இரண்டாம் கட்டம்

**5:30** AM: ஏரோது அந்திப்பாவுக்கு முன்

குற்றச்சாட்டு**:** ஒன்றுமில்லை. கூட்டத்தில் வன்முறை தூண்டப்பட்டது.

**சட்டநிலை**

இயேசு அமைதியாக இருந்தார். பிலாத்து எருசலேமில் இருந்ததால் ஏரோதுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

**வேத வசனங்கள் :** லூக்கா 23:6-12

ஏரோதுக்கு முன். லூக்கா 23:6-12 "கலிலேயா என்பதைப் பிலாத்து கேட்டபொழுது, இந்த மனுஷன் கலிலேயனா என்று விசாரித்து,அவர் ஏரோதின் அதிகாரத்துக்குள்ளானவர் என்றறிந்து, அந்நாட்களில் எருசலேமிலே வந்திருந்த ஏரோதுவினிடத்திற்கு அவரை அனுப்பினான். ஏரோது இயேசுவைக்குறித்து அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்ததினாலும், அவரால் செய்யப்படும் அடையாளத்தைப் பார்க்கவேண்டுமென்று விரும்பியிருந்ததினாலும், அவரைக் காணும்படி வெகுநாளாய் ஆசைகொண்டிருந்தான். அந்தப்படி அவரைக் கண்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டு, அநேக காரியங்களைக்குறித்து அவரிடத்தில் வினாவினான். அவர் மறுமொழியாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை. பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவர்மேல் பிடிவாதமாய்க் குற்றஞ்சாட்டிக்கொண்டே நின்றார்கள். அப்பொழுது ஏரோது தன் போர்ச் சேவகரோடுகூட அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, அவரைத் திரும்பப் பிலாத்துவினிடத்திற்கு அனுப்பினான். முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்துவும் ஏரோதும் அன்றையத்தினம் சிநேகிதரானார்கள்."

இயேசு எதுவும் பேசவில்லை. எந்த எதிர்வழக்கும் அவர் வைக்கவில்லை. அமைதியாக இருக்கும் தனது உரிமையைப் பயன்படுத்தினார். ஏசாயா - "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை, அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப் போலவும், தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்."

லூக்காவில் மாத்திரம் பதிவு செய்யப்பட்ட இந்த இரண்டாவது அரசியல் ரீதியான வழக்கும் சட்டவிரோதமானதாக இருந்தது. ஏனென்றால், ஏரோது ஆண்டிபாஸ் கலிலேயாவின் ஆளுநராக இருந்தார், பிலாத்து எருசலேமில் இருந்ததால் அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆகவே ஏரோது இயேசுவை பிலாத்துவிடம் திருப்பி அனுப்பினார். ஏரோதும் பிலாத்தும் இயேசுவை குற்றவாளி என்று அறிவிக்கவில்லை, ஆயினும் யூதத் தலைவர்கள் அவரைக் கொல்லும்படி ஆலோசனை நடத்தினர். "கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் இராஜாக்கள் எழும்பி நின்று அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி" ( சங்கீதம் 2:2, The Time is At Hand, பக்கம் 263)

ஆறாம் விசாரணை - அரசியல் ரீதியான விசாரிப்பு, மூன்றாம் கட்டம்

**6 AM:** மீண்டும் பிலாத்துவுக்கு முன்.

குற்றச்சாட்டு**:** தேசத்துரோகம். பரபாசுக்காக பேரம் பேசுதல்

**சட்டநிலை**

ஆறாவது மணி நேரம், ஆறாவது சட்டவிரோதமான வழக்கு, பிலாத்து ஆறு முறை இயேசு நிரபராதி என்று கூறினார். ஒரு அப்பாவி மனிதன் கொல்லப்படுவதை பிலாத்து தெரிந்தே அனுமதித்தார்.

**வேதவசனங்கள்**

மத்தேயு 27:15-26

மாற்கு 15:6-15

லூக்கா 23:13-25

யோவான் **18:39-19:16**

பிலாத்துவிற்கு முன் (ஆறு முறை இயேசு நிரபராதி என்ற கூறினார்) யோவான்: 18:39-40 "பஸ்கா பண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலை பண்ணுகிற வழக்கமுண்டே; ஆகையால் யூதருடைய ராஜாவை நான் உங்களுக்காக விடுதலைபண்ண உங்களுக்கு மனதுண்டா என்றான்.அப்பொழுது: அவர்களெல்லாரும் இவனையல்ல, பரபாசை விடுதலை பண்ண வேண்டும் என்று மறுபடியும் சத்தமிட்டார்கள்; அந்தப் பரபாசென்பவன் கள்ளனாயிருந்தான்."

யோவான் 19:1-16 "அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான். போர்ச்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள். பிலாத்து மறுபடியும் வெளியே வந்து: நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும் படிக்கு, இதோ, உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன் என்றான். இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இதோ, இந்த மனுஷன் என்றான். பிரதான ஆசாரியரும் சேவகரும் அவரைக் கண்டபோது: சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: நீங்களே இவனைக் கொண்டு போய்ச் சிலுவையில் அறையுங்கள், நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்றான். யூதர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின் படியே, இவன் சாகவேண்டும் என்றார்கள். பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது அதிகமாய்ப் பயந்து, மறுபடியும் அரமனைக்குள்ளே போய், இயேசுவை நோக்கி: நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான்.இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார். அதுமுதல் பிலாத்து அவரை விடுதலைபண்ண வகை தேடினான். யூதர்கள் அவனை நோக்கி: இவனை விடுதலை பண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டார்கள். பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, இயேசுவை வெளியே அழைத்துவந்து, தளவரிசைப்படுத்தின மேடையென்றும், எபிரெயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே, நியாயாசனத்தின்மேல் உட்கார்ந்தான். அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்தநாளும் ஏறக்குறைய ஆறுமணி நேரமுமாயிருந்தது; அப்பொழுது அவன் யூதர்களை நோக்கி: இதோ, உங்கள் ராஜா என்றான். அவர்கள்: இவனை அகற்றும் அகற்றும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா என்றான். பிரதான ஆசாரியர் பிரதியுத்தரமாக: இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை என்றார்கள். அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டு போனார்கள்."

இந்த ஆறாவது மற்றும் இறுதி வழக்கு காலை 6 மணியளவில் நிகழ்ந்தது. இயேசு நிரபராதி என்று பிலாத்து பலமுறை கூறியிருந்தார், ஆனால் வற்புறுத்தலின் கீழ் வந்த சச்சரவை தவிர்க்க ஒரு அப்பாவி மனிதனைக் கொல்ல அனுமதித்தார்.

ஆறு மணி நேரத்தில் ஆறு விசாரணைகள் நடந்தன - யூத தலைவர்கள் முன் மூன்று, புறஜாதி தலைவர்கள் முன் மூன்று. இயேசு ஆறு மணி நேரம் சிலுவையில் இருந்தார், அவருடைய மரணம் யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகிய இரு வகுப்புகளையும் மீட்டது.

இதில் ஒரு சுவாரசியம் என்னவென்றால், ஆறு என்ற எண் அபூர்ணத்தை குறிக்கும். மனுக்குலம் அபூரணமானது. மனுக்குலத்தின் மீட்பர் இயேசு பரிபூரணர், பாவத்திற்கான மீட்பை வழங்க இந்த பரிபூரண மனிதர் தேவைப்பட்டார்.

"இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார், அவருடைய வம்சத்தை யாரால் சொல்லிமுடியும், ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார், என் ஜனத்தின் மீறுதலினிமித்தம்

அவர் வாதிக்கப்பட்டார்."(ஏசாயா 53:8) என்று ஏசாயா தீர்க்கதரிசி எழுதுகிறார். இந்த விசாரணை மற்றும் இயேசுவின் மரணம் பற்றிய தீர்க்கதரிசனத்தை ஏசாயா வழங்குகிறார். ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோய் அவர் கொல்லப்பட்டார். அவருடைய இரத்தம் அனைவருக்கும் பாவ நிவர்த்திச் செய்கிறது. நினைவுக்கூறுதலில் நாம் பங்குபெறும்போது, நமது மீட்பர் நிந்தை, தவறான குற்றசாட்டுகள், சட்டவிரோத வழக்குகள் மேலும் மரணதண்டனை ஆகியவற்றைச் சகித்த இந்த கடைசி மணிநேரங்களைப் பற்றி சிந்தித்து பார்ப்போம். "என் நினைவாக செய்யுங்கள்" என்ற அவரது அறிவுரையை குறிப்பாக நினைவில் கொள்வோம்.

ஒரு பயபக்தியுள்ள, சிந்தனைமிக்க ஆய்வு

# நினைவுகூருதலின் விவாதங்கள்

"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து" (1கொரிந்தியர் 15:3)



***ROBERT BRAND***

வருடாந்திர நினைவுகூருதலில் நாம் கடைப்பிடிப்பதின் கடைசி இராபோஜனத்தின் நினைவாக இரண்டு முக்கியமான அடையாளங்கள் உள்ளன. நமது கர்த்தர் அடையாளங்களின் அர்த்தங்களைத் தெளிவுப் படுத்தினார். தமது வாக்கியத்தின் மூலம் இவ்வாறாக அப்பம் அவருடைய சரீரம் எனவும், ரசம் அவருடைய இரத்தம் என விளக்கமளித்தார். (மத்தேயு 26:26-28) இந்த இரண்டு சின்னங்களை அங்கீகரிப்பது மட்டுமல்லாமல், இந்த எளிய இன்னும் ஆழமான, நினைவுகூருதலுக்கு கூடுதல் சின்னங்களை சேர்ப்பதில் மிகவும கவனமாக இருக்கவேண்டும். (இரண்டாவது அடையாளமான திராட்சை ரசமானது "பாத்திரம்" எனவும் குறிப்பிடப்படுவதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இருப்பினும், பாத்திரமானது அடையாளம் அல்ல - அதன் உள்ளடக்கங்களே அடையாளமாக கருதப்படுகிறது.

**நமக்காக இயேசு நொறுக்கப்பட்டாரா?**

"இயேசு நமக்காக நொறுக்கப்பட்டார் என்பதே பலமுறை நாம் கேட்டிருக்கும் நினைவுகூருதல் ஆராதனையின் சொற்பொழிவாகும். இவ்வெளிப்பாடு எங்கிருந்து வந்தது? அது 1கொரிந்தியர் 11: 24 ம் வசனத்திலிருந்து வந்ததாகும். இது உங்களுக்காகப் பிட்கப்பட்ட என்னுடைய சரீரமாயிருக்கிறது என கே. ஜே.வி பதிப்பில் நாம் வாசிக்கிறோம். உங்களுக்காக பிட்கப்பட்டது என்ற சொற்றொடரானது எவ்வாறாயினும் போலியாக இருக்கலாம். இது வாட்டிகன்ஷ் மற்றும் அல்லது சினயாட்டிக் மொழிப்பெயர்ப்பான, பழைய வசனங்களின் இவை இரண்டும், அல்லது மற்ற பிற உயர்தரமான வேதவாக்கியங்களிலும் காணப்படவில்லை.

எந்த சுவிசேஷப் பதிவிலேயும் "உங்களுக்காக நொறுக்கப்படுகிறது என்ற அடையாளம் காணப்படவில்லை" மத்தேயு 26:26, மாற்கு14:22, லூக்கா22:19 மாறாக இவ்வெளிப்பாடானது மத்தேயு பதிவில் எளிமையாக "வாங்கிப் புசியுங்கள் என்னுடைய சரீரமாக யிருக்கிறது என்றே எழுதப்பட்டுள்ளது." 1கொரிந்தியர் நிரூபத்தை எழுதின ஆசிரியரான அப்போஸ்தலனாகிய பவுல் கடைசி இராபோஜனத்தில் இருக்கவில்லை. ஆகவே அவர் அந்த நிகழ்வின் காரியங்களை பேதுரு மற்றும் பிற அப்போஸ்தலர்களிடமிருந்தே கேட்டறிந்திருக்கக்கூடும், அல்லது அநேகமாக நமது கர்த்தரிடமிருந்தே கூட கேட்டறிந்திருக்கக்கூடும். 1கொரிந்தியர் , இயேசு நமக்காக பிட்கப்பட்டார் என்ற வாக்கியம் வேதாகமத்தில் வேறெந்த வசனத்திலும் இல்லாதது கவனத்தை ஈர்க்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. நமது கர்த்தர் இயேசு நமக்காகவும் உலகத்திற்காகவும் பெருமளவில் பாடுப்பட்டார் என்கிற காரியமானது எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை, ஆனால் "பிட்கப்பட்ட" என்ற வார்த்தை யானது ஏன் பலமுறை இடம் பெறுகிறது? "அவர்கள் போஜனம் பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு" பிடுதல் என்ற வார்த்தையின் கிரேக்கப்பதம் **KLAO** கிளோ என்றால் "பிடுதல்". ஸ்டராங்க்ஸ் 2806. ஆகையால், ரொட்டியை உடைப்பதற்கான குறியீடா? அல்லது வெறுமனே நடைமுறைக்குரியதா ? அடையாளமாக இருப்பின் நாம் மூன்றாவது ஒரு நினைவுகூருதலின் அடையாளத்தை கூட்டிக்கொள்ள வேண்டுமா?

நடைமுறையில் அப்பம் பிட்கப்படுதல் என்ற நடைமுறையில் பார்தோமாயின் ஒவ்வொரு அப்போஸ்தலருக்கும் ஒரு துண்டைக் கொடுத்திருப்பார். அப்பத்தின் பகுதிகளை பிட்கிறதைத் தவிர வேறு வழியில்லை. அப்பத்தின் அடையாளத்தை கடந்து செல்வதும் குறியீடாக இருந்ததா? கடைசி இராபோஜனத்தின் வேறு ஏதேனும் செயல்கள் அல்லது அம்சங்களும் குறியீடா? எங்கள் விளக்கமானது முதலாவது நினைவுகூருதலின் ஆராதனையில் இடம்பெற்ற அடையாளங்கள் பற்றினதாகும். நாம் ஆராதனையில் செய்யும் அனைத்து அடையாளங்களும் நடைமுறையில் செய்யும் அனைத்து அடையாளங்ளும் நடைமுறையில் செய்யாமல் கவனமாக மேலும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை இதன்

பொருளாகும். நினைவுகூருதல் என்பது நமது கர்த்தரின் சரீரம் மற்றும் இரத்தத்தை அடையாளப்படுத்துகிறது. ஆராதனையில் இடம்பெற்றுள்ள ஒரே அடையாளம் அப்பம் மற்றும் இரசம் என்பதை உறுதிப்படுத்துவதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடன் கூட இருப்பேன், நீங்கள் என்னைத் தேடுவீர்கள் என்ற வேதவாக்கியமானது நமக்கு மற்றொரு எச்சரிப்பின் குறிப்பாகக் காணப்படுகிறது. யோவான் 19:33-36 ல் அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை. ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான் - உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. அதைக் கண்டவன் சாட்சி கொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யா யிருக்கிறது - நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான். அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது.

ஏனெனில் நமது "பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசுவே" நமது பாவங்களுக்காக பலியானார். 1கொரிந்தியர் 5:7, யோவான் 1:29, மற்றும் பஸ்கா ஆட்டுக்குட்டியின் எலும்பில் ஒன்றும் முறிக்கப்படவில்லை. யாத்திராகமம் 12:46 ல் "அதை ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் புசிக்க வேண்டும்" அந்த மாம்சத்தில் கொஞ்சமாகிலும், வீட்டிலிருந்து வெளியே கொண்டுபோகக்கூடாது. அதில் ஒரு எலும்பையும் முறிக்கக்கூடாது- எண்ணாகமம் 9:12 ல் இதே தடைகள் காணப்படுகின்றன.

ஆதி கிறிஸ்தவர்களும் கூட அப்பம் பிட்கப் பட்டதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்." பொதுவாக இது போன்ற நிகழ்வுகளில் அப்பம் பிட்பதில் எந்த அடையாளமும் பரிந்துரைக்கப்படவில்லை. கூடியிருந்த சகோதரர்களுக்கு அப்பம் விநியோகிக்க வசதியாக இது ஒரு நடைமுறை விஷயமாக இருந்தது.

ASV பதிப்பில், 1கொரிந்தியர் 11:24 பின்வருமாறு முறையாக வழங்கப்பட்டுள்ளது. "அவர் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு அவர் இது என்னுடைய சரீரம், உங்களுக்கானது இதை என்னை நினைவுகூரும்படி செய்யுங்கள்." இவ்வாறாகவே ஒவ்வொரு சுவிசேஷப் பதிவுகளிலும் வழங்கப்பட்டுள்ளது.

**நினைவு கூருதல், இயேசுவை மாத்திரம் குறிப்பதா?**

வருடாந்திர அனுசரிப்பின் நோக்கம் இயேசுவை பிரத்தியேகமாக நினைவுகூருவதா, அல்லது இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்களின் பங்கை நினைவு கூருவதா?

இயேசு இப்பண்டிகையை "என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்" (லூக்கா22:19) என்றே கூறினார். நமது கர்த்தருடைய தியாகத்தை நினைவுகூரும் ஆராதனையானது அண்டசராசர ஒப்பந்தத்தின் பிரதான நோக்கமாக இருக்கிறது. மற்றும் கிறிஸ்துவின் சரீரமே இரண்டாவது பிரதான நோக்கமாகும். தேவனுடைய திட்டத்தில் சபையின் நிலை? அந்த கருத்தின்படியாக நாம் நினைவுகூருதலின் ஆராதனையை ஆசரிக்கவேண்டுமா? இச்சந்தர்ப்பத்தை சில சகோதரர்கள் நம்பக்கூடும். மற்ற சகோதரன் பாவநிவாரணபலியில் பங்குதாரர்களாக விரும்புகின்ற சபையும்கூட, "என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று தம்மை விசுவாசிப்பவர்களைப் பார்த்தே இவ்வாறாகக் கூறினார்."நம்மை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்ள் என்று அவர் கூறவில்லை.

முதலாவது மற்றும் இரண்டாவதான அடையாளங்களின் காரியத்தின் தொடாபுடைய சிக்கல்கள் இருக்கிறது. அல்லது சின்னங்களில் ஒரே ஒரு அடையாளங்களே காணப்படக்கூடும். இவ்வாசரிப்பில் இரண்டு அடையாளங்கள் காணப்படுகிறது. அந்த அடையாளங்களின் அர்த்தத்தினை நாம் அறிந்து கொள்வது மிக முக்கியமானதொன்றாகும். சில வேலைகளில் முதலாவது மற்றும் இரண்டாவது விளக்கமானது சரியாக இருப்பதை நாம் காண்கிறோம் மற்றும் சில சமயங்களில் அவ்வாறாக இருப்பதில்லை. உதாரணத்திற்கு "எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்துவ இயேசுஅவரே".(1தீமோத்தேயு2: 6 ) நாம் இயேசுவைக் குறித்து இவ்வாறாக வாசிக்கிறோம். யார் "மீட்கும்

பொருள்" என்கிறதான முதலாம் மற்றும் இரண்டாம் பயன்பாட்டினை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. இயேசு மாத்திரமே தனி ஒருவராக மீட்கும்பொருளை அளித்தார் மற்றும் மாறாக இரண்டாம் பயன்பாடானது எவ்வகையில் பயனுள்ளதாகயிருக்கவில்லை. சில சமயங்களில் இரண்டாவது பயன்பாடானது வசனங்களில் வெளிப்படையாகத் தெரிகிறது. உதாரணத்திற்கு மத்தேயு11:13-15 நமது கர்த்தர் எலியா தீர்க்கதரிசனம் யோவான்ஸ்நானகனுக்கு இரண்டாவதாக ஒப்பிட்டுக் காண்பிக்கிறார். "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகள் யாவரும் யோவான் வரைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான் கேட்கிறதற்கும் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்."சில சகோதராகள் எலியாவின் மூன்றாவது பயன்பாட்டை தேவாலயத்தின் ஒரு வகையாகக் காண்கிறார்கள். (**THE HERALD OF CHRIST'S KINGDOM JAN. - FEB.** 2019 பார்க்கவும்) முதலாவது, இரண்டாவது மற்றும் அதற்கு மேல் உள்ள சில பயன்பாடுகள் உவமைகளிலிருந்தே கண்டறியப்பட்டவையாகும்.

நினைவுகூறுதலின் அடையாளங்களான ஒன்று அல்லது இரண்டினுடைய பயன்பாடானது, எவ்வாறாயினும் 1கொரிரிந்தியர் 10:16 ல் உள்ள விளக்கத்திலிருந்தே வந்திருக்கக்கூடும். "நாம் துதிச்செய்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா ? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?"

ஐக்கியம் என்ற திறவு வார்த்தை ஸ்டிராங்க்ஸ், 2842, கோய்நோறியா, மற்றும் இதன் அர்த்தங்கள் ஐக்கியம், ஒருங்கிணைதல் மற்றும் சங்கத்தையும் குறிப்பதாக உள்ளது(**THAYERS LERCICON**) இயேசுவுடன் ஐக்கியம் கொண்டுள்ளபடியால் கிறிஸ்தவர்கள் சிலாக்கியம் பெற்றிருக்கின்றனர். சில வசனங்களில் உள்ளபடி கிறிஸ்துவின் பாவநிவாரண பலியில் சபையும் கூட பங்குகொண்டுள்ளதென்ற இந்த உபதேசத்தை சில சகோதரர்கள் விசுவாசிக்கின்றனர். 1கொரிந்தியர் 10:16 என்ற வசனத்தின்படி நாமும் அவற்றுள் ஒருவராக இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம் என கூறுகிறது. **KOINONIA** என்ற வார்த்தை ஐக்கியப்பட வேண்டும் என்கிற வகையில் சில இடங்களில் உபயோகிக்கப்பட்டுள்ளது. 2கொரிந்தியர் 13:14-"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், பிதாவாகிய தேவனுடைய அன்பும் மற்றும் பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் (கொய்நனியா) உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக ஆமென். பரிசுத்த ஆவி ஒரு நபர் அல்ல எனவும், பரிசுத்த ஆவியில் ஆளுகை செய்யப்படும் எனவும் பவுலை கவனித்தவர்கள் வெளிப்படையாக புரிந்து கொண்டிருக்கக்கூடும். எவ்வாறாயினும், அவர்கள் தேவனுடைய வல்லமை மற்றும் பலத்தோடும் இசைவுள்ளவர்களாக இருந்திருப்பார்கள் ஆகவே அவர்கள் ஐக்கியமானது பரிசுத்த ஆவியுடன் காணப்பட்டிருந்திருக்கும்.

பொதுவான நம்பிக்கை மற்றும் அநேகமாக பொதுவான இலக்கு, பொதுவான பயன்பாட்டிற்காக ஜனங்களிடையே கொய்நனியா ஏற்கனவே இருந்திருக்கக்கூடும். அவர்கள் பொதுவுடைமையால் என்ற வகையில் அவர்கள் ஐக்கியமாக இருந்திருக்கக் கூடும். அவர்கள் பொதுவானவைகளில் ஐக்கியப்பட விருப்பமுள்ளவர்களாக இருந்தபடியால் அவர்கள் ஒருங்கிணைந்து ஒரு சங்கத்தை ஏற்படுத்தினர்.

உதாரணத்திற்கு, பொதுவான வரலாற்றை உடையவர்களாகயிருத்தல், வரலாற்றின் முக்கியமான காலத்தில் உலகத்தின் ஒரு குறிப்பிட்டப் பகுதியில் வாழ்ந்தவர்கள்.

ஒட்டு மொத்த நினைவுகூருதலின் சின்னங்களையும் நாம் காண்கையில் ஒன்று அல்லது இரண்டுமே சபையை விளக்கிக் காண்பிக்கப்படுகிறதாக 1கொரிந்தியர் 10:16 ம் வசனம் குறிப்பதாக உள்ளது. ஐக்கியம் என்ற கிரேக்க வார்த்தையானது "ஒருமை" யின் அர்த்தத்தில் வருவதில்லை. ஆகவே நாம் உறுதியான முடிவைக் கொண்டு வருவதில் நாம் எச்சரிக்கையுள்ளவராக காணப்படவேண்டும்.

**யார் இந்த ஒரே அப்பம்?**

1கொரிந்தியர் 10:17ல் சரியாக வழங்கப்பட்டுள்ள படி, அண்டசராசரத்தின் ஒப்பந்தத்தோடு தொடர்புள்ளதாகையால் நாம் இக்கேள்விக்கு மிக சுலபமாக பதிலளிக்க முடியும். "நாமெல்லாரும் அந்த ஒரே அப்பத்தில் பங்குபெறுகிறபடியால் நாம் அநேகராயிருந்தும் ஒரே அப்பமாக இருக்கிறோம்." இது தவறாக

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஏனெனில் அந்த ஒரே அப்பத்தில் நாம் அநேகராயிருக்கிறோம். நாம் அந்த ஒரே அப்பத்தில் பங்குபெறுகிறபடியால் ஒரே சரீரமாக யிருக்கிறோம்." (எல்லா வேதாகம மொழிபெயர்ப்புக் களிலும் ஒரே வார்த்தைகள் உள்ளன)இது முறையான மொழி பெயர்ப்பல்ல. அந்த "ஒரே அப்பம்" அல்லது "ஒரே ரொட்டி" இயேசுவை மட்டுமே அடையாளப்படும். நாம் நம்முடைய கீழ்ப்படிதலினால், அவரோடுக்கூட தொடர்பு கொண்டிருப்பதால், நாம் இயேசுவுக்கு பங்காளிகளாக இருக்கிறோம். அதுபோல இனி வரக்கூடிய இராஜ்யத்தில் உலகமானது இயேசுவின் பங்காக காணப்படும்.

அநேக சமயங்களில் நாம் அனைவரும் அந்த அப்பத்தின் ஒரு பகுதி என கேட்டிருப்போம். ஏனெனில் அப்பமானது அநேக தானியங்களினால் உருவானது. இதை வசனங்களில் கூட எழுத்துப்பூர்வமாகக் காண முடிகிறது. ஆனால் இக்காரியங்கள் வேதாகமத்தில் காணப்படுகிறபடியால், சபை எங்கு தானியங்களுக்கு ஒப்புமையாக சொல்லப்பட்டிருக்கிறதென நாம் கண்டறிய முயல வேண்டும்.

இதன் மூலமாக நாம் வேதாகமத்தின் விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். நாம் எந்த சம்பவங்களையோ அல்லது ஒரு பொருளையோ இந்த அடையாளங்களுக்கு பொருத்திப்பார்க்கக்கூடாது என்பதில் மிக கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும். உதாரணத்திற்கு, சிலுவையிலறையப்படுவதற்கு முன் நம்முடைய கர்த்தரின் அங்கி, அவரிடமிருந்து எடுக்கப்பட்டது. (மத்தேயு27:35) மேலும் அவர்களுக்குள் சீட்டு போட்டு கொண்டார்கள். அந்த உடைகள் இயேசுவினுடையது. ஆகவே அந்த உடையானது சபைக்கு அடையாளமாக சொல்லப்படக்கூடுமா ? அநேக நூல்களைக் கொண்டே ஒரு உடை தயாரிக்க ப்படுவதால், இக்கேள்விக்கு ஆம் என்று நம்மால் உறுதியாக பதில் அளிக்கக்கூடும். மகிமையடைந்த கிறிஸ்து, தலையாகிய இயேசுவையும் சரீரமாகிய சபையுமாவார். ஆயினும், சபை ஒரு நூலைப் போல என வேதவசனங்களில் நாம் காண முடியாததால், நாம் அப்படிப்பட்ட பயன்பாட்டினை விளக்கம் அளிப்பதற்கு முயலுகிறதில்லை.

நமது கர்த்தரின் ஜெபத்தில் கூட "இன்றைய நாளுக்குரிய அப்பத்தை எங்களுக்குத் தாரும்" (மத்தேயு 6:11) என்று அநேக முறை விண்ணப்பிக்கப்படுகிறது. அநேக சகோதரர்கள் இதனை, மாம்சீக தேவையைக் குறிக்கிறதாகவும், மற்றும் ஆவிக்குரிய போஷிப்பாகவும் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். மத்தேயு 6:11ல் "அப்பத்தை எங்களுக்குத் தாரும்", யோவான் 6:53 ல் "ஜீவ அப்பம் நானே" மற்றும் 1கொரிந்தியர் 10:17 ல் "நாமெல்லாரும் அந்த ஒரு அப்பத்தில்" என்ற வசனங்களில் காணப்படும் அப்பம் என்ற வார்த்தைக்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை **ARTOS** ஆர்டோஸ் என்பதாகும். ஆனால் அவை ஒருபோதும் நிஜமான நினைவுகூருதலின் அடையாளத்துடன் தொடர்புடையதாக ஆகாது. ஆகவே நாம் வசனத்தில் உள்ள குறிப்பான வார்த்தைக்கு ஒரே அர்த்தத்தை பயன்படுத்தக்கூடாது.

யோவான் 6:35 ல் இயேசுவே அந்த ஒரே அப்பம் (ஜீவ அப்பம் நானே) என்று குறிப்பிட்டுள்ளார். நமது கார்த்தர் இதைக் குறித்து யோவான் 6:51ல் விரிவாக கூறுகிறார். "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம் இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான் நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்." நமது கர்த்தரைத் தவிர வேறு எவரும் "ஜீவ அப்பம்" என எப்பொழுதும் கூறிட முடியாது. இயேசுவுக்கு அப்பம் ஒரு அற்புதமான அடையாளமாக உள்ளது. ஏனெனில் அது தண்ணீரைப் போன்ற ஜீவனுக்கு அடையாளமான ஒன்றாக இருக்கிறது. யோவான் 4:13-14 ம் வசனத்தில் நமது கர்த்தர் இயேசு சமாரிய ஸ்திரீயிடம் கிணற்றண்டையிலே பேசின அவரது வார்த்தைகளை நாம் கவனிக்க வேண்டும். "இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார். அப்பமும் தண்ணீரும் வழக்கமாக வாழ்வதற்கு கட்டாயமான ஒன்றாக இருக்கிறது. ஆகவே முழு மனித குடும்பத்திற்கும் ஜீவன் கொடுக்கக்கூடிய ஒருவருக்கு அது மிகக் கச்சிதமாகப் பொருந்தக்கூடிய ஒரு அடையாளமாகும். யோவான் 6: 51ல் "நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்" என்பதாக தம்மையே அவர் குறிப்பிடுகிறார். ஆதாமுக்கான மீட்கும் பொருளாக

இது ஒரு ஆளுமையை நேரடியாகக் காண்பிப்பதுடன், மேலும் இது நினைவுகூருதல் ஆராதனையின் அப்பம் சின்னத்தின் பொருளாகும்.

**பாத்திரம் என்பதின் அர்த்தம் என்ன?**

புதிய ஏற்பாட்டில் "பாத்திரம்" என்ற வார்த்தைக்கு "POTERION" (பொடெரியான்) STRONG'S 4221, என்று பொருள். இவ்வார்த்தைக்கு மூன்று அர்த்தம் கொடுக்கப்படுகிறது. குடிக்கும் பாத்திரம், பாத்திரத்தில் உள்ளவை மற்றும் அடையாளமாக கதா பாத்திரம்.

புதிய ஏற்பாட்டில் "பாத்திரம்" என்ற வார்த்தையின் பயன்பாடுகளை விளக்குவதற்கு இந்த இரண்டு அர்த்தங்கள் நமக்கு உதவுகிறது என்று நாம் கருதுகிறோம். முதலாவது, நினைவுக்கூருதலின் ஆராதனையின் துவக்கத்தில் ஒரு சொல்லர்த்தமாக பாத்திரம் உள்ளது. திராட்சரமானது ஒரு திரவமாக இருப்பதால், அதைப் பத்திரப்படுத்துவதற்கும் மாற்றவும் ஒரு நேரடியான பாத்திரம்வழங்கப்பட்டது. அப்போஸ்தலர்களுக்கு இதை வழங்குவதற்கு வேறெந்த காரணமும் இருக்க முடியாது. இரண்டாவது, நமது கர்த்தர் தம்முடைய அனுபவத்தை விவரிக்க "பாத்திரம்" என்ற வார்த்தையை பயன்படுத்தியதுடன், சற்று விரிவாக பொறுப்பினை நிறைவேற்றுதல்என்பதையும்குறிப்பதாக உள்ளது.

நமது கர்த்தர் மகிமையிலிருக்கும் பொழுது தங்களுக்கு ஒரு சிறப்பான ஸ்தானம் வேண்டுமென யோவான் மற்றும் யாக்கோபு அவரிடத்தில் கேட்டபொழுது இவ்வாறாக பின்வருமாறு பதிலளித்தார். மாற்கு10:38 இயேசு அவர்களை நோக்கி நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்கே தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா? என்றார். இங்கே இயேசு நினைவு கூருதலின் பாத்திரத்தைப் பற்றிக் கூறுகிறாரா? நான் குடிக்கும் இரத்தத்தை உங்களால் குடிக்க முடியுமா? என்ற இவ்வசனதத்தை நாம் பார்க்கும் பொழுது அப்படியென்றால் இங்கே அந்த பாத்திரம் என்பது அவரது இரத்தத்தைப் பற்றினதே என்பது தெளிவாக உள்ளது என்ற அர்த்தத்தில் அல்ல. பாத்திரம் என்ற வார்த்தைக்கு ஸ்ட்ராங்ஸ் வேதாகம விளக்க அகராதியும் கூட ஒரு அநேக அல்லது வாழ்க்கையில் அனுபவங்கள் என்ற அர்த்தத்தினைத் தருவதாக உள்ளது. இந்த வேண்டுகோள் எளிதில் வழங்கப்பட்டது என்று இயேசு இங்கே சொல்லியிருந்தார். ஏனென்றால் கிறிஸ்தவ நடைப்பயணத்தின் சிரமங்களின் போது மகிமைக்கு ஆதரவாக கீழ்ப்படிதலும் உண்மையும் தேவை. விசுவாசத்திற்காக வெகுமதியாக இரக்கம் வழங்கப்படுகிறது. அது மிகுந்த முயற்சியால் அடையப்படுகிறது. (யோவான் 18:11 மற்றும் அப்போஸ்தலர் 14:12 ஐ பார்க்கவும்.)

கர்த்தர் மற்றுமாக ஒரு கேள்வியைக் கேட்டார். "நான் பெறும் ஸ்நானத்தை, நீங்கள் பெறவும் கூடுமா ? எனக் கேட்டார்? இங்கே நமது கர்த்தர் தண்ணீர் ஞானநானத்தைப் பற்றிப் பேசுகிறார் ? இல்லை அவர் அதைப் பற்றி பேசவில்லை இயேசு யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றதைப் போன்று ஒருவரும் பெறமுடியாது. மத்3:14 அடையாளமான ஞானஸ்நானத்துடன், அடையாளமான பாத்திரத்தின் நோக்கத்தினை நமது கர்த்தர் தொடர்ந்தார். அவர் கிறிஸ்தவ வாழ்க்கையின் கடுமையான உலகத்தையும் மாம்சத்திலிருந்து வரும் சோதனைகளையும் மற்றும் சாத்தானோடும் எதிர்த்து போர் புரிய வேண்டுமெனக் கூறுகிறார். மாற்கு 10:38 ல் உள்ள வாழ்க்கை அனுபவம் என்கிற பாத்திரமானது நாம் நினைவுகூருதல் ஆராதனையில் ஆசரிக்கிற பாத்திரமல்ல, ஏனெனில், கர்த்தர் இயேசு இராபோஜன சமயத்தில் "அப்போஸ்தலர்களிடம் பாத்திரத்தைக் கொடுத்தது, இது என் இரத்தம் அப்பதத்தை இது என் மாம்சம்" என்றார். நினைவுகூருதலின் பாத்திரமானது இயேசுவின் இரத்தத்தை அடையாளப்படுத்துகிறது. கெத்செமெனேயில் அவர் தமது பாத்திரததை தேவனிடம் நீக்கிப்போடும்படியாகக் கேட்டுக் கொண்டது மாற்கு 14:36 அவரது அனுபவங்களுடன் தொடர்புடையது அவருடைய இரத்தத்திற்கு அல்ல. உண்மையுள்ளவர் என்பதை நிரூபிக்க வேண்டியது குறித்து சகோதரர்கள் யாக்கோபு மற்றும் யோவானுக்கு சவால் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் கீழ்ப்படிதலின் கடுமையைப் பற்றியது, இயேசுவின் இரத்தம் அல்ல.

பரிபூரணமான ஆதாமுக்கு ஈடுபலி செலுத்த பரிபூரணமான மாம்சமும் இரத்தமும் உடைய இயேசுவால்

மாத்திரமே மீட்கும்பொருள் கொடுக்க முடியும். வருங்கால அங்கத்தினர்களாகிய கிறிஸ்துவின் மணவாட்டி அபூரணமாக இருக்கிறபடியால், ஆதாமின் மீட்கும்பொருள் கொடுக்கும் விஷயத்தில் இவர்கள் பங்குபெற முடியாது. "யுகங்களின் பாதை" என்ற பிரியமான பாடல் இதை நன்றாகக் கூறுகிறது. என் கையில் நான் எந்த விலையையும் கொண்டுவரவில்லை உம்முடைய சிலுவையில் நான் ஒட்டுக்கொண்டிருக்கிறேன். நினைவுகூருதல் சின்னங்களுக்கான ஒரே காரணத்தை பவுல் 1கொரி 11:26 ல் சுருக்கமாகக் கூறினார். "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.

## மற்றொரு வகையில் நினைவுகூருதல் இயேசுவைப் பற்றியது மாத்திரமா?

நிச்சயமாக நமது கர்த்தரின் தியாகத்தினையே நினைவுகூருதலின் அடையாளங்கள் கவனம் செலுத்துகின்றன. அதில் எவ்வித கேள்வியும் இல்லை எவ்வாறாயினும், எந்தவொரு அடையாளத்திற்கும் இரண்டாம் விளக்கம் இல்லை. இது கிரேக்க கொயினோனியாவின் பயன்பாட்டில், ஒரே நோக்கத்தின் ஒற்றுமை என சரியாக விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த விளக்கம் பாத்திரத்தின் இரண்டாம் சித்திரத்திலிருந்து திசைதிருப்பப்படுவதில்லை. இது சபையின் அனுபவத்தையும் தெரிவிக்கிறது. சில வசனங்களுக்குப் பின்பாக பவுல் பாத்திரம் மற்றும் அப்பத்தைப் பற்றிக்குறிப்பிடுகிறார். "நீங்கள் காத்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம் பண்ணக்கூடாதே, நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே." (1கொரிந்தியர் 10:21) அவர் ஒரு விசுவாசமுள்ள வாழ்க்கை முறையை (கர்த்தருடைய பாத்திரத்தை குடிப்பது) ஒரு தீய வாழ்க்கை முறையுடன் (பேய்களின் பாத்திரத்தை குடிப்பது) ஒப்பிடும் போது நான்கு வசனங்களுக்கு முன்னர் குறியிடப்பட்ட நினைவுகூருதலின் அடையாளங்களுக்கு அவர் இஙகே ஒரு நேரடி குறிப்பைக் குறிப்பிடுகிறார். அவர் நினைவுகூருதலின் பாத்திரத்தை சபையின் அனுபவத்துடன் ஒப்பிடுகிறார். குறைந்தபட்சம் ஒரு இரண்டாம் நிலை.

கர்த்தர், நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கக்கூடுமா என யாக்கோபு மற்றும் யோவானிடம் கேட்டது அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கைமுறையைக் குறிக்கிறது. ஆனால் அது நினைவுகூறுதலின் பாத்திரத்தோடு தொடர்புடையதல்ல என்று நாம் மறுக்க முடியாது. திராட்சரசமானது இயேசுவின் இரத்தத்தை அடையாளப்படுத்துகிறது. ஆனால் அவரின் சொல்லர்த்தமான இரத்தம் இயேசுவின் தியாக வாழ்வையும், அவருடைய பாவநிவாரண பலியையும் காட்டுகிறது. இது அவரது வாழ்க்கைமுறையின் திரட்டப்பட்ட நன்மைகளாகும். ஆகவே, இந்த இரண்டு நினைவுகூருதலின் அடையாளங்களிலும் நான் ஈடுபலியை (அப்பம்) மற்றும்பாவநிவாரண பலியையும்(பாத்திரம்) பெற்றுள்ளோம். பெரும்பாலான சகோதரர்கள்பாவநிவாரணபலியில் சபைக்கு பங்கு உள்ளதென ஏற்றுக்கொண்டால், இயேசுவினுடைய இடுக்கமான வழியில் உள்ள வாழ்க்கை அனுபவங்களின் பாத்திரத்தில்பங்கெடுப்பு நிச்சயமாக பொருத்தமானதும்சரியான நோக்கம்உள்ளதாகும். — *Tom Ruggirello*

இருபத்தி ஆறு கணிப்புகள்

# இயேசுவின் கடைசி இரவு மற்றும் அவரை சிலுவையில் அறையப்பட்ட போது நிறைவேறின தீர்க்கதரிசனங்கள்



"தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோமர் *15:4*)

(1) Psalm 41:9 / Mark 14:10 யூதாசின் துரோகம்

(2) Zechariah 11:12 / Matthew 26:15 முப்பது வெள்ளி காசுகளுக்கு விற்கப்பட்டார்.

(3) Zechariah 13:7 /Mark 14:50 மேய்ப்பர் அடிக்கப்பட்டார்.

(4) Isaiah 63:3 / Mark 14:40 ஒருவராய் ஆலையை மிதித்தார்.

(5) Psalm 35:11 / Mark 14:55-61 பொய் சாட்சிகள்

(6) Zechariah 11:13 / Matthew 27:3-7 குயவனுடைய நிலத்தை 30 வெள்ளி காசுக்கு வாங்கினார்கள்

(7) Isaiah 53:7 / Matthew 27:12-14 அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போல

(8) Psalm 69:20 / Luke 22:61 தேற்றுகிறவர்ககள் ஒருவரும் இல்லை

(9) Isaiah 50:6 / Matthew 27:26, 30 முதுகில் அடிகளும்

(10) Psalm 22:16 / Matthew 27:27 நாய்கள் சூழ்ந்தது

(11) Psalm 69:19 / Matthew 27:28, 29 வையப்பட்டு, அவமதிக்கப்பட்டு, கேலிசெய்யப்பட்டார்

(12) Psalm 22:15 / Matthew 27:32 சிலுவையை சுமக்க பலமில்லாதவராக

(13) Psalm 69:21 / Matthew 27:34 காடியை குடிக்கக்கொடுத்தார்கள்

(14) Psalm 22:16 / Matthew 27:35 கைகளிலும், கால்களிலும் ஆணிகள் பாய்ச்சப்பட்டது

(15) Isaiah 53:12 / Luke 23:32-33 கள்ளர்களுடன் சிலுவையில் அறையப்பட்டார்

(16) Psalm 22:18 / John 19:23-24 வஸ்திரங்கள் பங்கிடப்பட்டு, மேலங்கி சீட்டுபோடப்பட்டது

(17) Psalm 22:7 / Matthew 27:39-40 பரியாசம் பண்ணி தலையை துலுக்கினார்கள்

(18) Psalm 22:13, 17 / Luke 23:35 கோபம் கொண்டு கெர்ஜித்தார்கள்

(19) Psalm 22:7-8 / Matthew 27:43 அவரை இரட்சிக்கக்கூடிய தேவன் மேல் நம்பிக்கை வைத்தார்

(20) Amos 8:9 / Matthew 27:45 அந்தகாரமானது

(21) Psalm 22:1 / Matthew 27:46 கைவிடப்பட்டார்

(22) Psalm 34:20 / John 19:33, 36 எலும்புகள் முறிக்கப்படவில்லை

(23) Psalm 22:14 / John 19:34 இருதயம் நொருங்கியது. வாரத்தின் பாதியில் சங்கரிக்கப்பட்டார்

(24) Daniel 9:26, 27 / John 11:50-52 வாரத்தின் பாதியில் சங்கரிக்கப்பட்டார்

(25) Isaiah 53:10 / John 1:29 பாவத்திற்கான பலி

(26) Isaiah 53:9 / Matthew 27:57-60 ஐசுவரியவான்களின் கல்லறையில்

அநேகமாக அக்காலம் வரைக்கும் வாழ்ந்த ஒரு பில்லியன் ஜனங்களின் வரலாற்றில், இயேசு தெய்வீக நிலைக்கு உயிர்த்தெழுதல் அடைந்தது ஒரு தனித்துவமானதாகும். எலியா மூலமாக ஒருவரும், எலிசா வழியாக இரண்டு பேர்கள் உட்பட, ஒரு பில்லியனில் நான்கு பேர் மட்டுமே உயிரோடு எழுந்திருந்தாலும் அதில் ஒருவர் மட்டுமே தெய்வீக நிலையை அடைந்தார். (1 இராஜாக்கள் 17:17- 24, 2 இராஜாக்கள் 4:32-37, 13:20-21) ஆனால் இயேசு கிறிஸ்துவின் தியாக பலி, இதுவரை வாழ்ந்த பில்லியன் கணக்கான ஜனங்களை மீண்டும் உயிர்ப்பிக்கும்.

### ஏற்றக்கால சிந்தனைகள்

# தனித்துவமான தியானங்கள்



Brad Bach

"தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது." (1யோவான் 4:9)

அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் நினைவுகூருதலின் காலம் தனித்துவமானது. நம் சிந்தையில் இருக்கும் எண்ணங்களில் மற்றும் நாம் எதை மதித்துணர்கிறோமோ மற்றும் குறிப்பாக எதற்காக நன்றி செலுத்துகிறோமோ, அல்லது நமது ஜீவியத்திலுள்ள சில பகுதிகள் திருத்தப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும் என்று நாம் நினைக்கிறோமோ அவைகள் தனித்துவமானது.

இந்த தனித்துவமான தியானங்கள் கர்த்தருடைய நினைவுகூருதலைப் பற்றிய நமது தனிப்பட்ட ஆய்வில் வேதத்தின் குறிப்பிட்ட வசனங்களை ஆராய்வதன் விளைவாக ஏற்படக்கூடும், அவற்றின் அர்த்தத்தை முன்பை விட ஆழமாக மதித்துணரக்கூடும். ஒரு வேதப்பாடத்தில் வழங்கப்பட்ட சில எண்ணங்களால் நாம் கேட்டுத் தூண்டப்பட்டிருக்கலாம் அல்லது சில அறுவடை சத்திய எழுத்துக்கள் இயேசுவையும் அவருடைய தன்மை மற்றும் கீழ்ப்படிதல் மற்றும் அவரது வாழ்வையே அர்ப்பணிப்பதற்கான அவரது சித்தத்தையும் பற்றி சரியாக எழுதப்பட்ட நுண்ணறிவு நம் இருதயத்தைத் தொட்டிருக்கலாம். நாம் பங்கெடுக்கப்போகும் வருடத்தின் இந்த நினைவுகூருதலின் காலத்தில் நமக்கு தனிப்பட்ட அனுபவங்கள் இருந்திருக்கலாம், இது இயேசு செய்ததைப் பற்றிய புதுப்பிக்கப்பட்ட ஆழ்ந்த மதித்துணர்தலை நமக்குக் கொடுத்துள்ளது, மேலும் தனிப்பட்ட முறையில் நமக்காகவும், ஒட்டுமொத்த மனுக்குலத்துக்காகவும் செய்து வருகிறது. இந்த ஓட்டப்பந்தயத்தில் ஓடுபவர்களாக நம்மைப் பற்றி இன்னும் கற்பிக்க வடிவமைக்கப்பட்ட கர்த்தரின் தனித்துவமான பாடங்களை நாம் இந்த அனுபவங்களில் காணலாம். பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தில் நம்முடைய நம்பிக்கைகளை வலுப்படுத்த உதவுகிறது. (1கொரிந்தியர் *9:24*, எபிரெயர் *12: 1*, யூதா*1: 3*), இந்த பிரதிபலிப்புகள் நமது சீர்பொருந்துதலுக்கு உதவுகின்றன, உலக மனுக்குலத்தின் பாவ - நோயுற்றவர்களை மென்மையாகவும் அனுதாபமாகவும் வழிநடத்த நமது எதிர்கால இராஜ்யத்தின் ஏற்ற பாத்திரங்களாக நம்மை தயார்ப்படுத்த உதவுகிறது.

இந்த தியானங்கள் மிகவும் அற்புதமானவைகள், நாம் எப்போதுமே ஆர்வமுள்ள மாணவர்களாகவும் கற்பிக்கக்கூடியவர்களாகவும் இருக்கவே விரும்புகிறோம். நம்முடைய பரலோகத் தகப்பனிடமிருந்து வரும் படிப்பினைகளைக் கவனமாகப் பார்ப்பதிலும், அவர் பிரியப்பட்டு அனுப்பும் எந்த ஆதாரங்களிலிருந்தும் வழிமுறைகளைப் பெறுவதிலும் மகிழ்ச்சியடைகிறோம். இந்த படிப்பினைகள் நம்மிடையே உள்ள சிறந்த ஆசிரியர்களிடமிருந்து வந்தவையாக இருக்கலாம் அல்லது அவை மிகவும் தாழ்மையான வழிமுறைகளால் வந்தவையாகக்கூட இருக்கலாம், தற்போது நம் வாழ்வின் நோக்கம் யாதெனில் தேவனுடைய குணத்தையும் அவருடைய இயக்கக கொள்கைகளையும் கற்றுக்கொள்வதே யாகும். நமது நோக்கம் நமது ஆவிக்குரிய சிந்தையைப் பயிற்றுவிப்பதும், எல்லா சூழ்நிலைகளிலும் அந்த தெய்வீகக் கொள்கைகளைப் பயன்படுத்துவதற்குப் பழக்கப்படுவதும் ஆகும். புது சிருஷ்டிகளாக அவருடைய கொள்கைகள் நம்முடைய சிந்தனையின் பழக்கமாகவும் நமக்கு அதிகளவில் இயல்பாகவும் மாற வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். தேவ வார்த்தையின் அனுதின வாசிப்போடு இணைந்த வாழ்க்கையின் புதிய அனுபவங்கள் மூலம், உள்ளான தேவ ஆவியான பரிசுத்த ஆவியின் வளர்ச்சியை உணர வேண்டும் என்பதே நமது இருதயத்தின் விருப்பம், இதனால் கிறிஸ்துவின் சீஷர்களாகிய நம்முடைய எண்ணங்களும் வெளிப்பாடுகளும் எப்போதும் நம்முடைய பரலோகத் தகப்பனுக்குப் பிரியமானதாக இருக்கும். (யோவான் *14 : 16-17, 17: 17-23*, 2கொரிந்தியா*5:17*, 1யோவான் *3:22*). முதன்மை போதகரான இயேசு நமக்கு அறிவுறுத்தியதோடு, இந்த தெய்வீகக் கொள்கைகளைப் பழக்கவேண்டும் என்பதைச் சரியாக முன்மாதிரியாக வழங்கவும் செய்தார். அவர் எப்பொழுதும் தனது பிதாவுடன் முழுமையான ஐக்கியத்துடன் இருந்தார், நாமும் அவ்வாறு இருக்கவே

விரும்புகிறார். (யோவான் *17:17-23*). ஆகவே, நமக்காக மனமுவந்து, "நாம் பாவிகளாயிருக்கையில் நமக்காக மரித்த.." (ரோமர் *5:8*) அவர் வழங்கின இறுதியான பாடங்கள் மற்றும் முன்மாதிரிகளை ஒவ்வொரு ஆண்டும் நாம் தியானிக்க வேண்டிய பல விஷயங்கள் நம்மிடம் இருக்கிறதா?

**அறியப்பட்ட பாடங்கள்**

எகிப்தில் இவ்வளவு காலத்திற்கு முன்பு தேவானல் ஒப்பிடமுடியாத ஞானத்திற்கும் முன்னறிவிப்பிற்கும் ஒரு நிரூபணமாக எகிப்தில் நிறுவப்பட்ட பஸ்கா வகைகள் உட்பட ஒவ்வொரு ஆண்டும் நினைவுகூருதலின் காலத்தில் நாம் ஆனந்தம் கொள்ளக்கூடிய சிந்திக்கக் கூடிய பல ஏற்றக் கால, அறியப்பட்ட பாடங்கள் உள்ளது (1பேதுரு*1:18-20*, ஏசாயா *46:9-10*). முதலாம் வருடத்தில் ஒரு பழுதற்ற ஆண் ஆட்டுக்குட்டியைத் தேர்ந்தெடுத்து அடிக்கப்பட தேவன் கட்டளைப் பிறப்பித்தார், பின்னர், ஒவ்வொரு எபிரெய வாசஸ்தலத்தின் வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் ஆட்டுக் குட்டியின் இரத்தத்தை தெளிப்பதன் மூலம், இஸ்ரயேல் தேசத்தின் ஒவ்வொரு தலைப்பிள்ளைக்கும் இரவில் "சங்காரக்காரன்" தேசத்தைக் கடந்து சென்ற போது பாதுகாப்பு வழங்கப்பட்டது. (யாத்திராகமம் *12: 21-23*). இந்த முதற்பேறானவர்களின் கடந்து போகுதல் முழு இஸ்ரயேல் தேசத்தின் இரட்சிப்புக்கு முந்தி நிகழ்ந்தது. இந்த நிகழ்வுகள் நிழலாகும், பொதுவாக உலகத்தின் இரட்சிப்புக்கு முன்கூட்டியே இயேசுவின் இரத்தத்தின் கீழாக "முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை" இரட்சிக்கப்படுவதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும் (எபிரெயர் *12:23*). யாத்திராகமத்திற்குப் பிறகு 1,647 ஆண்டுகளுக்குப் பிறகுதான், இயேசு பஸ்கா நிழல்களைத் துல்லியமாக நிறைவேற்றினார், அவரே மெய்யான "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் *1:29*) மேலும், அந்த குறிப்பிடத்தக்க நாட்களின் பல்வேறு காட்சிகளான: பேதுருவும் யோவானும் மேல் அறையில் ஏற்பாடுகளைச் செய்ய முன்னாக அனுப்பட்டதையும், இயேசு தனது பன்னிரண்டு அப்போஸ்தலர்களுடன் சேர்ந்து அனுபவித்த கடைசி பஸ்கா போஜனத்தின் ஐக்கியத்தையும் பற்றி நாம் சிந்திக்கலாம். இயேசு அவர்களின் பாதங்களைக் கழுவுதலின் நிகழ்வு, மெய்யான மனத்தாழ்மை மற்றும் ஊழிய மனப்பான்மைக்கு ஒரு சிறந்த உதாரணத்தை அவர்களுக்கும் (நமக்கும்) அளிப்பதாக இருக்கிறது. மெய்யாகவே இது "ஒருவர்மேலொருவர் பட்சமாயிருக்கும்" ஒரு செயலாகும். (ரோமர் *12:10*). அவர்களில் ஒருவரே இயேசுவைக் காட்டிக் கொடுப்பார் என்று கேட்டபோது குழப்பம் ஏற்பட்டது. சுய பரிசோதனையில் ஒவ்வொருவரும் "நானோ" ? என்று கேட்டார்கள்.

பஸ்கா போஜனத்தில் இயேசு இடைப்பட்டார் என்று நாம் நினைக்கிறோம். இனி ஒரு நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தமும் புசிப்பும் தேவையில்லை, ஏனென்றால் இப்போது அதன் இடத்தில் மெய்யான "தேவ ஆட்டுக்குட்டி" அடிக்கப்பட இருந்தது, அது ஒரே அடியாக, மீண்டும் மீண்டும் செய்யப்படாத பிரியமான பலியாக இருந்தது (எபிரெயர் *9:26*, 1பேதுரு*3:18*). பின்னர், பஸ்கா போஜனத்தின் போது, இயேசு இடைநிறுத்தினார். அவர் அப்பத்தைப்பிட்டு, பின்னர் திராட்சரசம் கொண்ட ஒரு பாத்திரத்தைக் கையில் எடுத்தார். இவைகள் சம்பவிக்கப் போகும் மரணத்தை அடையாளப்படுத்த அவர் பயன்படுத்தின எளிய அடையாளச் சின்னங்கள், இயேசு செய்ததை நினைவுகூற சபை பயன்படுத்த போகும் அடையாளச்சின்னங்களாகும். இந்த அடையாளச் சின்னங்கள் ஒருபோதும் அவரது மெய்யான சரீரம் மற்றும் இரத்தமாக உட்கொள்ளப்படுவதாக எடுத்துக்கொள்ளப் படவில்லை, ஏனெனில் சிலர் பின்னர் "இடமாற்றத்தை" கற்பிக்கத் தொடங்கினர், மேலும் அவை இன்னொரு உயர்ந்த நிழலாக இருக்கவுமில்லை. மாறாக இவைகள் முற்றிலும் ஆதாமையும் அவருடைய சந்ததியினரையும் பாதாளத்தின் வல்லமையிலிருந்து இரட்சிப்பதற்காக தேவ நீதியின்படி மீட்கும் பொருளாக நிர்ணயிக்கப்பட்ட அவரது சொந்த பலியான ஜீவியத்திற்கான அடையாளமாக இருந்தன (1கொரிந்தியர் *15: 21- 22,55*, 1தீமோத்தேயு*2: 6*, ஓசியா*13:14*) இது முதற்கொண்டு, இயேசுவுக்குள்ளான அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள் ஆண்டுதோறும் இந்த சின்னங்களை ஒரே நினைவுச்சின்னமாக, நினைவு கூருவதில், அவர்கள் நவமானதாய் குடிக்கும் வரை, பின்னர் அவருடைய இராஜ்யத்தில் மகிழ்ச்சியின் பாத்திரமாக இருக்கும் வரை இயேசுவின் மரணத்தை மதித்துணரும் ஒரு வழியாக அவைகளில் பங்கெடுப்பார்கள் (மத்தேயு*26: 29*)அப்போஸ்தலர்கள் அப்போது இதையெல்லாம் புரிந்து கொண்டார்களா?

இல்லை, ஆனால் பெந்தெகொஸ்தே நாளில் முழு முக்கியத்துவத்தையும் அவர்கள் புரிந்துகொள்வார்கள், அப்போது பரிசுத்த ஆவி அவர்கள் மீது வந்து வெளியாக்கப்பட்ட அனைத்தின்ஆவிக்குரியப்புரிதல் அளிக்கப்படும் (யோவான் *14:26*) இருப்பினும், இந்த நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கு மற்றொரு பரிமாணம் உள்ளது.

தம்முடைய அப்போஸ்தலர்கள் ஒன்றுகூடி வந்தவுடன், ஒவ்வொருவரும் பங்கெடுப்பதற்காக இயேசு அந்த சின்னங்களை அவர்களிடம் கொடுத்தார். இயேசுவால் வழங்கப்பட்ட ஈடுபலியின் புண்ணியத்தை விசுவாசத்தினாலேயே தங்களால் ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை விரைவில் அவர்கள் புரிந்துகொள்வார்கள். சின்னங்களை தனது சீஷர்களுக்குக் கொடுப்பதன் மூலம், தங்களது வாழ்க்கையை அர்ப்பணிப்பதன் மூலம் - மீட்கும்பொருளாக அல்ல, ஆனால் ஒரு அடிச்சுவட்டைப் பின்பற்றுபவரா, தம்முடைய பலியில் தம்முடன் பகிர்ந்து கொள்ளும்படி இயேசு அவர்களக்கு அழைப்பு விடுத்தார். அவருடைய புண்ணியத்தை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து இந்த "புதிய மார்க்கம்" திறக்கப்படும் (எபிரெயர் *10:20*). அவர்களுடைய வாழ்க்கையை, அவர்களுடைய சிறிய அனைத்தையும் பலியாக்கவும், அவருடனே பாடுப்பட்டால் அவருடன் ஆளுகையும் செய்வோம் என்பதற்காகவும், "கிறிஸ்து இயேசுவில் தேவன் அழைத்த உன்னத அழைப்பிற்கு" பின்னால் உள்ள, பூமியின் அனைத்து குடும்பங்களுக்கும் ஆசீர்வாதத்தின் முகவர்களாக மாறும் "நோக்கத்தை" அறிந்து கொள்வதற்கும், இது ஒரு வாய்ப்பாக இருக்கும். (மத்தேயு*26: 17-29*, யோவான் *17:24*, I கொரிந்தியர் *10: 16-17*, ரோமர் *8: 16-17,28*, கலாத்தியர் *3: 8,16,29*, பிலிப்பியர் *3: 10-14*) முழு புதிய ஏற்பாடும் கிறிஸ்துவை (அபிஷேகம் பண்ணப்பட்ட), தலையாக இயேசுவையும், அவருடைய சரீரத்தின் அங்கங்களாக திருச்சபையும் இருக்கிறது என சாட்சியம் அளிக்கிறது (எபேசியர் *5:23-32*) இந்த தாழ்மையான போஜனத்தில் நாம் மகிழ்ச்சியடைகிறோம், முதன்மையாக இயேசுவின் பரிபூரண ஈடுபலியான, எல்லாவற்றையும் சாத்தியமாக்கிய அவரது மரணத்தைக் குறித்து, மற்றும் இரண்டாவதாக, கிருபையால், இயேசுவோடு அவருடைய பலியில் பங்கெடுக்க விரும்புவோருக்கு, "மரணபரியந்தம் உண்மையாயிருப்பவர்களுக்கு அவருடன் ஆளுகைச் செய்ய தேவன் ஒரு அழைப்பை விடுதுள்ளதைக் குறித்தும் நாம் மகிழ்ச்சியடைகிறோம் (வெளிப்படுத்தல் *2:10*) ஒவ்வொரு ஆண்டும் நியமிக்கப்பட்ட நேரத்தில் நன்றியுடன் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறோம்.

## கடந்த வருடத்திலிருந்த ஒரு தனித்துவமான தியானம்

கடந்த நினைவுகூருதலில், சின்னங்களின் பங்கெடுப்பையும் ஆராதனையையும் தொடர்ந்து, நாம் அசாதாரணமான, தனித்துவமான ஒன்றைச் செய்தேன். தி பேஷன் ஆ.:ப் கிரைஸ்ட் திரைப்படத்தைப் பார்த்தேன். அதை ஊக்குவிக்கவோ அல்லது பரிந்துரைக்கவோ இல்லை என்றாலும், இயேசுவின் இறுதி மணிநேர வாழ்க்கை, அவரது சோதனை மற்றும் அவரது மரணம் ஆகியவற்றின் கிரா:.பிக் சித்தரிப்பு மிகவும் உணர்ச்சிவசப்படுத்தியது. இந்த சித்தரிப்பு, இயேசு நம் மீதுள்ள அன்பினால் துன்பப்படுவதற்கும் சகித்துக்கொள்வதற்கும் தயாராக இருப்பதைப் பற்றிய எனது மதிப்பினைத் தீவிரப்படுத்தியது. அவரை அனுப்பிய பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற இயேசுவின் நிபந்தனையற்ற விருப்பத்தைப் பற்றிய எனது மதிப்பினை இன்னும் இது அதிகரித்தது (யோவான் *5:30; 6: 38-44, 7:16, 12: 44-50*)

மத்தேயு *27:11-31*ல் உள்ள நிகழ்வு, சிலுவையில் அறையப்படுவதைக் கொணருவதில் ஆசாரியரால் துண்டப்பட்ட தாக்கத்தைப் பற்றியும், இயேசு குற்றமற்றவர் என்று அறிவித்ததைத் தொடர்ந்து பிலாத்துவின் குறியீட்டு கை கழுவுதல் மற்றும் குற்றவாளி பரபாஸை விடுவித்தல் பற்றியும் கூறுகிறது. ரோமானிய வீரர்கள் அரமனையிலே இயேசுவை பரியாசம் பண்ணிணதை இது விவரிக்கிறது. அங்கே அவர்கள் இயேசுவின் தலையில் முள்ளுகளால் பின்னின ஒரு கிரீடத்தை" வைத்து, ஒரு சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி", மாயமான மரியாதை செலுத்தி, "யூதருடைய இராஜாவே, வாழ்க" என்று சொன்னார்கள். அவர்கள் அவருக்கு செங்கோலகக் கொடுத்த ஒரு "கோல்" மூலமே அவரின் சிரசில் அடித்தார்கள். இயேசுவுக்கு செய்யப்பட்ட இழிவான துஷ்பிரயோகம் சித்தரிக்கப்பட்ட அளவுக்கு கடுமையானதாக இருந்திருக்கும் என்பதில் எங்களுக்க சந்தேகம் இல்லை. இன்னும்

"முட்கிரீடம்" மற்றும் "மேலங்கி" தரித்தவராக இருந்த இயேசு மீண்டும் கூட்டத்தின் முன் கொண்டுவரப்பட்டார். "இதோ, இந்த மனுஷன்" என்று அறிவித்தபோது, அவர்களுடைய இரத்தவெறியைச் சமாதானப்படுத்தும் என பிலாத்து நம்பினார்.

"அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா ? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலை பண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான். இயேசு பிரதியுத்தரமாக, பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது, ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்." "அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்த நாளும் ஏறக்குறைய ஆறுமணி நேரமுமாயிருந்தது, அப்பொழுது அவன் யூதர்களை நோக்கி - இதோ, உங்கள் இராஜா என்றான், அவர்கள், இவனை அகற்றும் அகற்றும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து, உங்கள் இராஜாவை நான் சிலுவையில் அறையலாமா? என்றான். பிரதான ஆசாரியர் பிரதியுத்தரமாக, இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே இராஜா இல்லை என்றார்கள். அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும் படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக் கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டு போனார்கள்." (யோவான் *19:10-11, 14-16*)

**உச்சக்கட்டம்**

சிலுவை, இப்போது இந்த பரிபூரண மனுஷனாகிய இயேசுவிற்கு, அத்தகைய துன்பம் நேர்ந்தது. தற்காலத்தில் வாழ்பவர்கள் அன்று இருந்திருந்தால் மிகுந்த வேதனையின் தருணங்களுடன் தாங்கள் மிகவும் ஆழமாக நேசித்த மற்றும் இந்த மனிதரை, இந்த குமாரனைப் பார்க்கும் போது குறுகி, அவர்களின் இருதயங்கள் அவர்களுக்குள் உருக நிற்கச் செய்வார்கள். இன்னும் இந்த கொடுமை, சொல்லமுடியாத இந்த துன்பம் அவரது பிதாவின் கையால் தாங்கப்படாது. உண்மையில், பிதா தாமே செய்ய சொன்ன அனைத்தையும் செய்வதில் இயேசுவின் நிபந்தனையற்ற உறுதிப்பாட்டின் இறுதி நிரூபணத்தை இது நிறைவு செய்யும். இது மட்டுமே அவரது ஏற்பாட்டினை இறுதி செய்யும். இது உண்மை என்று நமக்கு எப்படித் தெரியும்? பதில் வேதத்தில் காணப்படுகிறது-

*எபிரெயர் *10:7* - "அப்பொழுது நான் - தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்."

*யோவான் *6:38* "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்."

*மத்தேயு *26:39*"என் பிதாவே, இந்தப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும், ஆகிலும் என் சித்தத்தினபடியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது."

*யோவான் *18:11*"பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?"

*எபிரெயர் *5:7-9*" அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி.."

ஏன் இத்தகைய கடினமான இன்னல்கள் ? இயேசு உண்மையுள்ளவராக இருந்தால், அழியாமை அவருக்கு கொடுக்கப்படும், இது தேவனால் இதுவரை வழங்கப்பட்டதை விட உன்னத இருப்பாகும். உண்மையில், இது தேவனுடைய ஒரு சிறப்பியல்பாகும் - அழியாமை - மரிக்க முடியாத தன்மை. இயேசு "கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்" (எபிரெயர் *5:8*)."கற்றது, " ஸ்ட்ராங்கின் 3129 என்ற இந்த வார்த்தை, தையர் மற்றும் வைன் ஆகியோரால் "பயிற்சி" என்ற கருத்தை உள்ளடக்கி உள்ளது. தையர், " (இ) பயன்பாடு மற்றும் நடைமுறையால் கற்றுக்கொள்வது, பழக்கமாக இருப்பது, பழக்கம்." பின்வரும் வசனங்களைக் குறிப்பிடுவதில் வைன் இதே விரிவாக்கப்பட்ட வரையறையை மேற்கொள் காட்டுகிறார் - பிலிப்பியர் *4:11*, 1 தீமோத்தேயு *5: 4,13*, தீத்து *3:14*, எபிரெயர் *5:8*.

இயேசு தனது முழு இருப்பு முழுவதிலும் கீழ்ப்படிதலை கடைப்பிடித்தார்", மற்றும் அப்போது கற்பனைக்கு அப்பாற்பட்ட மிகக் கடினமான சூழ்நிலைகளிலும் கூட அவருடைய விசுவாசத்தை சந்தேகத்திற்கு இடமின்றி

நிரூபித்தார். ஆனால் அதற்கும் மேலாக இன்னும் பல கூடுதலான விஷயங்கள் இருக்கின்றன, "தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்." "கேட்டுக்கப் போகிற" பாவத்தின் "விசாலமான வழியில்" மனுக்குலம் வெகுதூரம் சென்று விட்டது (மத்தேயு*7:13*) மனித வரலாற்றின் பெரும்பகுதி முழுவதும் வன்முறை நிகழ்ந்துள்ளது மற்றும் பாவ அநியாய, வன்முறை மற்றும் பயங்கரமான வாழ்க்கையையும் மரணங்களையும் அனுபவித்திருக்கிறார்கள். உயிர்த்தெழுப்பப்பட்ட மனுக்குலம் அனைவரையும் அவருடைய இராஜ்யத்தின் வேலையின் மூலம்,"நித்திய இரட்சிப்புக்கு" அழைத்துச் செல்வதில், யாரும் இயேசுவிடம், "ஆனால் நான் அனுபவித்தபடியே நீங்கள் துன்பப்படவில்லை" என்று சொல்ல முடியாது. ஒருபோதும் முடியவே முடியாது, அவரை அறிந்துகொள்ளவும் அவரை நேசிக்கவும், அவருக்குக் கீழ்ப்படியவும் வரும்படியாக மனிதர்களை நித்திய ஜீவனுக்கு இட்டுச்செல்லும் இரட்சிப்புக்கு அதிபதியாக இயேசு அனுபவித்த துன்பங்கள் அவரை ஒரு சந்தேகத்திற்கிடமில்லாத நிலையில் வைத்தன.

"நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்படும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்." (எபிரெயர் *4:15*)

இயேசு பாத்திரத்தை தம்முடைய சீஷர்களிடம் கொடுத்தபோது, தனக்கு முன்பாக இருப்பதை அவர் அறிந்திருந்தார். அப்போஸ்தலர் ***3:19-21***ல் பேசப்படும் "நிறைவேறித் தீருங்காலங்கள்" தேவன் திட்டமிட்டு முன்னறிவித்தார். கிறிஸ்துவுக்காக "பல அங்கத்தினர்களை" (1கொரிந்தியர் ***12:27***) உள்ளடக்கிய "சரீரம்" என்றும் அழைக்கப்படும் ஒரு "சபையை" (1கொரிந்தியர் ***1:2***) உருவாக்க தேவன் தேர்ந்தெடுத்தார். அவர்கள் "மணவாட்டி" (யோவான் ***3:29***) என்றும் அழைக்கப் படுகிறார்கள், மேலும் "ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" என்றும் அழைக்கப்படுகிறார்கள். (1பேதுரு***2:9***) இந்த சபைக்கான நோக்கம் பாவத்துடன் எண்ணற்ற அனுபவங்களால் கூடுதலாக வழங்குவதாகும். இந்த வழியில், மனுக்குலம் அனுபவித்த ஒவ்வொரு மோசமான அனுபவங்களும் ஒரு முழுமையான, அனுதாபமுள்ள ஒரு ஆசாரியரைக் கொண்டிருக்கும், அவர்கள் அவர்களுக்கு அருகில் நிற்கவும், அவர்களுக்கு உதவவும் ஊக்கப்படுத்தவும், பரிசுத்த மனித சுபாவத்துக்கு ஏற்றவாறு உயர்த்தவும், பரிசுத்த பெரும் பாதையில் உதவி கரம் கொடுக்கவும் உதவுவார்கள் (ஏசாயா***35: 1-10***)

அனைத்து தேவத் திட்டங்களும் மிக உயர்ந்த மற்றும் சிறந்த நோக்கத்திற்காக சேவை செய்கின்றன, மேலும் அவை நமது இறுதி நன்மைக்கு அவசியமானவை, இல்லையெனில் இந்த குறிப்பிட்ட வழியில் செய்யப்படாது. இயேசு தம் மணவாட்டி பக்கத்திலிருந்தும், பரலோகத் தகப்பனின் வழிகாட்டும் கையின் கீழும் நிறைவேற்றும் காரியங்கள், வாக்குறுதியளிக்கப்பட்டதை, சரியான "இளைப்பாறுதல்" மற்றும் "உலகின் அனைத்து குடிகளின் ஆசீர்வாதத்தையும்" அவர் ஏற்றகாலத்தில் நிறைவேற்றுவார். நினைவுகூருதலின் மூலம் இயேசுவின் மரணத்தை அனுசரிப்பதில் மகிழ்வோமாக (ஏசாயா***55:7-13***)

"நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது." (1யோவான் ***4:10***)

# உன் அறைக்குள்ளே பிரவேசி



"என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள்." (ஏசாயா**26:20**)

***Edited from a 1928 Article in The Herald of Christ's Kingdom***

நம்முடைய பரலோகத் தகப்பனின் இந்த வார்த்தைகளில் ஒரு மென்மையான அன்பு வெளிப்படுகிறது. இது அவருடைய ஜனங்கள் மீது அவருக்குள்ளிருக்கும் மிகுந்த அன்பபையும், அவர்கள் மீது அவர் கொண்டுள்ள விசேஷித்த அக்கறையையும் உணர உதவுகிறது. இந்த யுகத்தின் முடிவின் நோக்கு நிலையில் இருந்து பார்த்து, தீர்க்கதரிசி மூலம், ஒரு மகா பெரிதான உபத்திரவ காலத்தைப் பற்றி நமக்கு முன் எச்சரிக்கை கொடுக்கிறார். (வசனங்கள் 5,6,21) -"யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" அப்பொழுது, தற்போது இருக்கும் அரசியல், சமூகம் மற்றும் மத அமைப்புகள் அனைத்தும் பெரும் அழிவிற்கு உள்ளாக்கப்படும். ஆயினும்கூட, எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் தம் மனுஷரை அவருக்குள் இளைப்பறுதலாகவும், சமாதானமாகவும் வைத்திருப்பார்."உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள், கர்த்தராகிய யெகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்." (வசனங்கள்3,4)

தேவன் தனது மற்றுமொரு தீர்க்கதரிசி மூலமும், தைரியமும் நம்பிக்கையும் கொடுக்கும் வார்த்தைகளை நமக்கு கொடுத்துள்ளார் - "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி (தற்போதைய சமுதாய ஒழுங்குகள்) நிலைமாறினாலும், மலைகள் (அரசாங்கங்கள்) நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துப்பேனாலும் (உலகளாவிய குழப்பம் என்னும் கொந்தளிக்கும் கடலில் தூக்கி எறியப்பட்டாலும்) அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்.... சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்." (சங்கீதம் **46:1-3,7**) நிச்சயமாக, "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்." (சங்கீதம்**103:13**)

ஆனால், "என் ஜனம்" என்ற அன்பான பெயரை கொடுப்பதற்கு தேவன் பிரியப்படும் இவர்கள் யார் ? அவரின் பெயரைக்கொண்ட அனைவரையும் உள்ளடக்கியதா இந்த வகுப்பு ? இல்லை, ஏனெனில் அதில் ஏராளமான கள்ள போதகர்கள் இருந்து விடுவார்கள். சங்கீதக்காரர் கூறுவது போல, பலியினால் தேவனோடு உடன்படிக்கை செய்தவர்களை மாத்திரமே இந்த வகுப்பில் உள்ளனர் - அர்ப்பணிக்கப்பட்ட, உண்மையுள்ள தேவனின் பிள்ளைகள் யாவரும், எவ்வளவு சிறியவர்களாக இருந்தாலும், எவ்வளவு பெலவீனமானவர்களாக இருந்தாலும், தேவனின் கிருபையின் உதவியால் அவருக்கு உண்மையும், உத்தமும், கீழ்ப்படிதலும் உள்ள பிள்ளைகளாக வாழ தங்கள் இருதயங்களை உறுதியாக வைத்திருக்கும் யாவரும் இந்த வகுப்பில் உள்ளடங்குவர்.

தேவனுடைய ஜனங்களாக கருதப்படுவது ஒரு மாபெரும் பாக்கியம். ஆனால் பலர் புரிந்துகொள்வதைக் காட்டிலும் இது பெரிதான அர்த்தத்தைக் கொண்டது - அவர்களின் பங்கும் தேவனின் பங்கும் மிக அதிகமாக தேவைப்படுகிறது. அவர்களின் பங்கு, கிறிஸ்துவ நாமத்தைக் கொண்ட ஒரு பெரிய அமைப்பில் பெயரளவில் வாழ்வது அல்ல, மாறாக, கிறிஸ்துவின் மூலம் அவர்கள் தேவனின் குமாரர்களாகவும், சந்ததியாகவும் மாறிவிட்டார்கள் என்பதையும், அவருடைய அன்பான குமாரனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்காக அவர்கள் தங்களை முழுமையாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் உலகின் வீண் ஆடம்பரத்தையும் மகிமையையும் கைவிட்டு, அதன் ஆவி, லட்சியங்கள், நம்பிக்கைகள் மற்றும் நோக்கங்களைத் தவிர்த்து வாழவும்

உடன்படிக்கை செய்துள்ளனர் என்பதையும் குறிக்கிறது. அதுமட்டுமல்லாமல், அந்த உடன்படிக்கையை நிறைவேற்ற, அவர்கள் தினந்தோறும் உண்மையுள்ளவர்களாக சாந்தமாக தங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு தங்களின் தலையாகிய கிறிஸ்து இயேசுவைப் பின்பற்ற முயற்சிக்கிறார்கள்.

தேவனின் பங்கு, கிறிஸ்துவிற்குள் வந்தவர்களுக்கு, இப்போதைய வாழ்விலும், வரவிருக்கும் காரியங்களிலும், அவருடைய கிருபையான வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதை குறிக்கும். தற்போதைய வாழ்வில் அவர் தமது அன்பு, கவனிப்பு, ஒழுக்கப்படுத்துதல், ஆலோசனை, போதனை, பாதுகாப்பு மற்றும் இறுதிவரை ஊக்கம் தருகிறார். அதன் பிறகு நாம் அவருடைய மகிமையான பிரசன்னத்தில் வரவழைக்கப் பெற்று, நித்திய இளைப்பாறுதல், மகிழ்ச்சி, அமைதி ஆகியவற்றைப் பெறுவோம். தேவனின் ஜனங்கள எத்துணை பாக்கியவான்களாக இருக்க வேண்டும், தற்போதைய வாழ்க்கையில் கூட அவருடைய தயவின் வெகுமதி கணக்கீடுக்கு அப்பாற்ப்பட்டது.

உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வல்லவருடைய நிழலில் தங்குவான். பிரியமானவர்களே, ஆசீர்வாதமான சிலாக்கியமாகிய ஜெபத்தின் மூலமாகவும், அவருடைய விலையேறப்பெற்ற வார்த்தையின் மீதும், அவர் வாக்களித்த தெய்வீக கவனிப்பின் மீதும் உள்ள விசுவாசத்தின் மூலமாகவும், தேவனுடன் நெருங்கிய உறவும், ஐக்கியமும் ஏற்படும் இடமே இந்த உன்னதமானவரின் மறைவிடம்.

"நம் ஆத்துமாவை சுற்றியுள்ள அனைத்தும் வழிவிலகி போன பின், அவரே நம் நம்பிக்கையும் தங்குமிடமும் ஆவார்."

இந்த மறைவிடம் எத்துணை விலையேறப் பெற்றதாக உள்ளது, இன்றுவரை உலகத்தை, முக்கியமாக கிறிஸ்துவ நாடுகளை நடத்திக் கொண்டிருக்கும் குழப்பத்தின் மத்தியிலும் நாம் எப்படிப்பட்ட இளைப்பாறுதலையும், புத்துணர்ச்சியையும் உணர்கிறோம் - தற்போதைய திருப்தியற்ற சமூக ஒழுங்கை மறுசீரமைக்க மனிதர் எடுக்கும் தவறான முயற்சிகளில் அவர்களுக்கு இருக்கும் பெருமை மற்றும் மதியீனத்திலிருந்து இளைப்பாறுதல், மனித மரபுகளின் தற்போதைய குழப்பத்திலிருந்து உண்மை மற்றும் நீதியின் தெளிவான கொள்கைகளை உருவாக்கும் வீண் முயற்சியில் நாவுகளுக்கிடையில் ஏற்படும் சண்டையிலிருந்து இளைப்பாறுதல் (சங்கீதம் **31:20**). உலகம் கொடுக்கவும் முடியாது, பறித்துக்கொள்ளவும் முடியாத, இளைப்பாறுதல், சமாதானம், வெளிச்சம், மற்றும் சந்தோஷத்தை நாம் இங்கு காண்கிறோம்.

## அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைப்பார்

உலகத்திலிருந்தும், பெயர் கிறிஸ்துவ சபையின் பல்வேறு அமைப்புகளிலிருந்தும் விலகி, தேவனுடன் தனியாக நடக்கும் நோக்கத்தை புரிந்து கொள்ளக்கூடியவர்கள் மிகக் குறைவு, மேலும் அவ்வாறு நடப்பவர்கள் அவர் நாமத்தின் நிமித்தம் ஏற்படும் பல அவதூறுகளை சகித்துக்கொள்ளவேண்டும். ஆனால் பயப்படாமல் இருங்கள், "உன் கதவுகளைப் (விசுவாசத்தின் கதவை) பூட்டிக்கொண்டு", நிந்தைகளுக்கு செவிசாய்க்காதிருங்கள், அவர்கள்பால் செவிடர்கள் போல் இருங்கள், மேலும் "சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம்பண்ணுங்கள், அவரே உங்கள் பயமும் அவரே உங்கள் அச்சமுமாயிருப்பார்" (ஏசாயா) மற்றும் "பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை எல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர் களாயும் (உங்களுக்கு முன் நடக்கும் சச்சரவுகள்) நில்லுங்கள்" (எபேசியர் **6:16**)

"கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்? -- எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது, என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்... தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார் ... என் தகப்பனும் என் தாயும் (நான் மிகவும் நம்பும் நண்பர்கள்) என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார். கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன். நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர்

என்னோடுகூட இருக்கிறீர், உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்." (சங்கீதம் 27:1,3,5,10,23:1,4,56:4)

எதிரியின் ஈட்டிகள் நம் இருதயங்களை காயப்படுத்தும்போது, நம்முடைய பலவீனத்தைக் கருத்தில் கொண்டு, ஆறுதல் என்னும் தைலத்தை நம்மேல் ஊற்றுகின்ற சர்வவல்லவர் எத்துணை தயவை பொழிகிறார். அவர் கிறிஸ்து விடுவித்த தம் பிள்ளைகள் ஒருவரைக்கூட "மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்" (நீதிமொழிகள்) என்கிற அடிமைத்தனத்திற்கு திரும்ப போகவிட மாட்டார்.

நமது கர்த்தருக்கு பிரியமில்லாத காரியங்களை செய்ய நாம் அஞ்ச வேண்டும், நாம் நீதியை அறிந்திருந்து, அதனை நேசித்து, தேவனுடைய நியாயப்பிரமாணத்தை நம்முடைய தலையில் மட்டுமல்ல, நம்முடைய இருதயங்களிலும் வைத்திருக்க வேண்டும். இவ்வாறு செய்தால் தான் நாம் அவரிடத்தில் அங்கீகாரம் பெறுவோம். மேலும், விசுவாசத்தினாலே தேவன் மேல் சார்ந்திருக்கிற வருக்கும், சத்தியத்திற்காகவும் நீதிக்காகவும் வீர ஊழியம் செய்ய, விசுவாசத்தின் மூலம் அவர் அளிக்கும் வல்லமையினால் பெலசாலிகளாக செல்பவர்களுக்கும், ஆசீர்வாதமான வாக்குறுதியை தருகிறார், "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு இராஜ்யத்தை கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்." (லூக்கா **12:32**)

உலகம் முழுவதையும் விழுங்கும் உபத்திரவம் என்னும் புயல், தனிப்பட்ட நிலையிலும், கூட்டாகவும் எல்லா மனிதர்களையும் பாதிக்கும் அதே வேளையில், அவருடன் இன்னும் நெருங்கி வர மட்டுமே முற்படும் கர்த்தருடைய ஜனங்கள், அவருக்குள் உறவும், ஐக்கியம், இளைப்பாறுதலும் இருக்கும் மறைவிடத்திற்குள் இன்னும் அதிகமாக பிரவேசித்து, விசுவாசம் என்னும் கதவுகளை அவர்களை சுற்றி அடைத்து, மற்ற எல்லா வகுப்புகளுக்கும் இருக்கும் அச்சம், பயம், நடுக்கம் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பாக மறைக்கப் பட்டிருப்பார்கள்.

அவர்கள் தங்கள் தற்காலிக காரியங்கள் மேல் விழும் தாக்கங்களை பொறுமையாக தாங்கிக் கொண்டிருக்கும்போது, இந்த புயலின் மத்தியிலும் அமைதியின் மத்தியிலும் தேவனின் மேலதிகாரத்தையும், பராமரிப்பையும் பற்றிய அறிவை பெற்றிருப்பதால், அதில் அவர்கள் மகிழ்ச்சியாய் இருப்பது மாத்திரமல்லாமல், அவருடைய சினம் "கொஞ்சநேரம்" மட்டுமே வெளிப்படும் என்ற அவருடைய ஆசீர்வாதமான வாக்குறுதியிலும், அதன் பின்னர் அவருடைய நீதியான இராஜ்யம் வல்லமையிலும் மகிமையிலும் வெளிப்பட்டு சூரியனை போல் பிரகாசிக்கும் என்பதிலும் மகிழ்ந்திருப்பார்கள்.

"என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள்." ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு அழைப்பு, கர்த்தரை, உம்முடைய சிறகுகளின் மறைவை நாங்கள் விசுவசிக்கிறோம்.

## இன்றைய தீர்க்கதரிசனம்

# எழுச்சிக்கு எதிரான யூத எதிர்ப்பு



"சுவிசேஷத்தைக் குறித்து அவர்கள் உங்கள் நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்" தெரிந்துகொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களா யிருக்கிறார்கள், தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே," (ரோமர் 11:28, 29)

ஜனவரி 5 -ம் தேதி, தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் உட்பட ஆர்பாட்டக்காரர்கள், யூத - விரோதத்திற்கு எதிராக ஒற்றுமையுடன் புரூக்லின் பாலத்தின் குறுக்கே அணிவகுத்துச் சென்றனர். நியூயார்க்நகரத்தின் வடக்கே டிசம்பர் ஹன்னுகா (Hannukah) கொண்டாட்டத்தின் போது நடந்த தாக்குதல்களில் ஐந்து பேர் காயம் அடைந்தனர். மேலும் நீயூஜெர்சியில்உள்ள ஜெர்சி நகரில் கோஷர் மளிகைக் கடையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிர் இழந்தார். பாலம் அணிவகுப்பில் சென்ற ஒருவர் கூறுகையில், "யூத எதிர்ப்பு மிக விரைவாக வளர்ந்து வருகிறது. இந்த வேகம் மிகவும் அச்சத்தை தருகிறது... இது மிகவும் நிஜமான ஒன்றாக காணப்படுகிறது. மற்றும் இது ஏதோ வொன்றின் துவக்கமாக இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது."

ஐரோப்பாவில், பல மறக்க முடியாத யூத எதிர்ப்பு நிகழ்வுகள் கடந்த ஆண்டு செய்திகளாய் வெளியிடப்பட்டன:

மே 24 அன்று, பிரான்சின் போர்டியாக்ஸில் ஒரு யூத கல்லறை அழிக்கப்பட்டது.

*மே 24 அன்று, ஜெர்மனியின் யூத -விரோத ஆணையாளர் யூதர்களுக்கு எதிரான தாக்குதல் அதிகரித்து கொண்டிருந்த காரணத்தினால், யூதர்களை பொதுவில் கிப்பா (தலை மறைத்தல்) அணிய வேண்டாம் என்று எச்சரித்தார். மே 28 அன்று, ஐக்கிய இராஜ்யத்தின் தேசிய மனித உரிமை நிறுவனம் தொழிற்கட்சிக்குள் யூத எதிர்ப்பு குறித்து முறையான விசாரணையைத் தொடங்கியது. அந்த ஆண்டின் பிற்பகுதியில், 1935யில் நடந்த தேர்தலில் மிக மோசமான தோல்வியை சந்தித்த பின்னர், வெளியேற்றப்பட்ட தொழிற்கட்சி சட்டமியற்று பவர்கள் தோல்விக்கு காரணமாக "யூத விரோதத்தின் கறைக்கு எதிராக நிற்க மீண்டும் மீண்டும் விரும்பவில்லை என்று குற்றம் சாட்டினர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அடிப்படை உரிமைகள் நிறுவனம் (FRA) அதன் இரண்டாவது வருடாந்திர கணக்கெடுப்பில், 12 ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளில் (ஆஸ்திரியர், பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், ஜெர்மனி, ஹங்கேரி, இத்தாலி நெதர்லாந்து, போலந்து, ஸ்பெயின், ஸ்வீடன் மற்றும் UK) மதிப்பிடப்பட்ட யூத ஜனங்களின் தொகையில் 96% பேர் உள்ளனர்.

28% ஜனங்கள் யூதர்களாக இருப்பதை குறித்து வருடத்தில் ஒரு முறையாவது துன்புறுத்தப் படுகின்றனர். 34% யூதர்கள், துன்புறுத்தப் படுவோம் என்ற அச்சத்தில் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்வதில்லை. 38% குடியேறுவதைக் கருத்தில் கொண்டுள்ளனர். ஏனெனில் அவர்கள் யூதர்களாக பாதுகாப்பாக உணரவில்லை. ஒட்டுமொத்தமாக பதிலளித்தவர்களில் 70% பேர் ஆன்டி செமிட்டிசத்தை எதிர்த்து போராடும் உறுப்பு நாடுகளின் முயற்சிகள் பயனற்றவை என்று கருதுகின்றனர்.

ஜெர்மனியின் ஹாலில் (), யோம் கிப்பூரில் (), ஒரு தனி துப்பாக்கிதாரி ஜெப ஆலயத்தைத் () தாக்கி, அந்த தாக்குதலை கேமிங்தளமான ட்விட்ச்யில் நேரடியாக ஒளிப் பரப்பினார். தாக்குதல் நடத்தியவரின் ஆயுதங்கள் பழுதடைந்ததால் மட்டுமே தாக்குதல் தோல்வியடைந்தது. பின்னர் அருகிலுள்ள லான்ஸ் பெர்க்கில் இரண்டு பேரைக் கொன்றார். மேலும் இருவர் காயமடைந்தனர். அந்த வார தொடக்கத்தில் கத்தியுடன் ஒரு மனிதர் பேர்லினில் உள்ள நியூஎன்ற ஜெப ஆலயத்தின் () வெளியே இருந்த தடையை தாண்டினார். பின்னர் பாதுகாப்பு காவலர்களால் நிறுத்தப்பட்டார்.

ஆஸ்திரியா, பிரான்ஸ், ஜெர்மனி, ஹங்கேரி, போலந்து சுவீடன் மற்றும் UK ஆகிய நாடுகளில் வசிக்கும் 7000 மக்களிடையே ஒரு சி. என்.என் கருத்து கணிப்பு நடைப் பெற்றது. அதில் உலகெங்கிலும் உள்ள நிதி மற்றும் வணிகத்தில் யூதர்கள் "அதிக செல்வாக்கு உடையவர்கள்" என்ற கருத்தை மூன்று பெரியவர்களில்

ஒருவர் கூறியதாகக் காட்டப்படுகிறது. வின் FRAவின் விஞ்ஞான ஆலோசகரான லோமிஸ் டிமித்தரா காப்போல்ஸ் கூறுகையில், "இந்த சமூகத்தை ஊடுருவும் யூத விரோதம், யூதர்கள் மற்றவர்களைப் போல வாழமுடியாது என்றும், அவர்கள் தங்கள் சொந்த நாடுகளில் யூதர்களாக வாழ முடியாது என்றும் நினைக்கிறார்கள்.

### யூத விரோதத்தின் ஆதாரம்

அப்போஸ்தலர்கள் மற்றும் பிற ஆரம்பகால கிறிஸ்துவ தலைவர்கள் பெரும்பாலும் யூதர்கள். இந்த மனிதர்கள் இறந்த பிறகு (மத்தேயு 13:25) இஸ்ரயேலுக்கு வழங்கப்பட்ட பழைய ஏற்பாட்டு வாக்குறுதிகளை கிறிஸ்தவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்று பிரசங்கிக்கும் தவறான தலைவர்கள் கிறிஸ்தவ மதத்தில் எழுந்தார்கள். கிபி 160யில் ஜஸ்டீன் மார்ட்டியர் இதைக் குறித்து யூதர்களுக்கு "வேதாகமம் உங்களுடையது அல்ல, நம்முடையது" என்று எழுதுகிறார். லையானின் பிஷப் "யூதர்கள் தேவனின் கிருபையிலிருந்து விலக்கப் படுகிறார்கள்" என்று எழுதுகிறார். ஸ்பெயினின் எல்விராவில் உள்ள கவுன் சிலில் (கிபி 305) யூதர்களுடன் உணவும் பகிர்வதற்கும் யூதர்களை திருமணம் செய்வதற்கும், யூதர்களின் ஒய்வுநாளை கடைப் பிடிப்பதற்கும் கிறிஸ்தவர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. மிலன் ஆணை (கிபி313) பேரரசின் அனைத்து ஜெப ஆலயங்களையும் தடை செய்தது. 321 யில் கான்ஸ்டென்டைன் , கிறிஸ்தவததை ரோமானிய பேரரசின் ஆதிக்க மதமாக பிரபலப்படுத்தினார்.

முன்னர் யூதர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் திரும்பப் பெறப்பட்டன. ரபினிக்கல் அதிகார வரம்பு ரத்து செய்யப்பட்டது. யூதர்கள் இராணுவம் மற்றும் உயர் சிவில் அலுவலகத்திலிருந்து விலக்கப்பட்டனர். வெர்சிலியின் பிஷப், (கிபி 370). எபிரெய வேதாகமத்தின் வாக்குறுதிகள் கிறிஸ்தவர்களக்கு மாற்ற பட்டதாகவும், கிறிஸ்தவ தேவாலயம் யூத மதத்தை விட மேலானது எனவும் கற்பித்தார்.

அந்தியோகியாவின் பிஷப் (387) ஜான் கிறிஸ்டோஸ்டன் யூதர்களுக்கு எதிராக எட்டு பிரசங்கங்களை வழங்கியபோது யூத எதிர்ப்பு ஒரு புதிய நிலைக்கு உயர்ந்தது. அவர் "யூதர்களின் ஜெப ஆலயம் ஒரு விபச்சார விடுதி மற்றும் திரையரங்குகள் மட்டும் அல்ல, இது கொள்ளையர்களின் குகை மற்றும் காட்டு மிருகங்களுக்கான உறைவிடம். எந்த யூதரும் தேவனை ஆராதிப்பதில்லை. யூதர்கள் பிசாசால் பிடிக்கப்பட் டகொலைக்காரர்கள், அவர்களின் துஷ்பிரயோகம் மற்றும் குடிபழக்கம் அவர்களுக்கு ஒரு பன்றியின் பழக்கவழக்கங்களை தருகிறது. யூதர்கள் தேவனால் கைவிடப்பட்டவர்கள், மற்றும் கொலை குற்றத்திற்காக தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்" என்று முழுங்கினார்.

வட்டிக்கு கடன் கொடுப்பது தடை செய்யப்பட்டு கிறிஸ்தவ இரட்சிப்பின் ஆபத்தை விளைவிப்பதாக நம்பப் பட்டதால், யூதர்கள் பணத்தை கடன் கொடுக்கும்படி வற்புறுத்தப்பட்டனர். யூதர்கள் ஏற்கெனவே தொலைந்து போனவர்கள் என்று அவர்கள் கருதியதால் இது ஒரு பொருட்டல்ல என்று நினைத்தனர். இதனால் யூதர்கள் வியாபாரம் மற்றும் பணம் கடன் கொடுப்பது போன்ற வர்த்தகங்களில் முக்கியத்துவம் பெற்றனர்.

### யூதர்களுக்கான தேவனின் திட்டம்

யூதர்களைக் கண்டிக்க இயேசு ஒரு போதும் தம்மை பின் பற்றுபவர்களுக்கு கற்பிக்கவில்லை. மேலும் இஸ்ரயேலை துாக்கி எறிவது பற்றியும் அவர் போதிக்கவில்லை. ஆமோஸில் நாம் வாசிக்கும் பொழுது. "ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக்கொள்ளும் படிக்கு, அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்." (ஆமோஸ 9:11-12) எருசலேம் மாநாட்டின் போது அப்போஸ்தலர் 15:16-17ல் இந்த வசனங்களை ஜேம்ஸ் மேற்கோள் காட்டுகிறார். "சாவடி" என்பது சுக்கோத் என்ற எபிரெய வார்த்தையாகும். இது சகரியா 14:16ல் கூடார பண்டிகைக்கு பயன்படுத்தப்படுகிறது. ஆயிர வருட அரசாட்சியில் அனைத்து நாடுகளும் யெகோவா தேவனை வணங்க எருசலேமுக்கு வரும் காட்சியாகும். அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடுகையில் "மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன்; அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக்

கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு, விலக்குவார் என்றும்;" (ரோமர் 11:25-26) யூத தேசத்திற்கு அதற்கு சாதகமான இடம் நிராகரிக்கப்பட்டது. (மத்தேயு 23:38) அதன் தீர்க்கதரிசன இரட்டிப்பு நிறைவடையும் வரை (ஏசாயா 40:1,2) மற்றும் கிறிஸ்துவின் நிறைவு (புறஜாதியினரின் முழுமை). தேசத்தை மீட்டெடுத்து, ஆபிரகாமுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வரை யெகோவா தேவன் யூத ஜனங்களை இந்த துன்புறுத்தல்களின் மூலம் தனித்தனியாகவும், தனித்துவமாகவும் வைத்திருக்கிறார். "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 31:31-33). ஆபிரகாமின் வாக்குறுதியான பூமிக்குரிய வித்து மாம்ச இஸ்ரயேலை மையமாக கொண்டிருக்கும் என்று ஆபிரகாமுக்கும், யாக்கோபுக்கும் தேவன் அளித்த வாக்குறுதி இதன் மூலம் நிறைவேறும் "உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.", "உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்." (ஆதியாகமம் 28:14,13:16)

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாலஸ்தீனத்தில் யூதர்கள் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டது, 1948ல் தேசத்தின் பிறப்பு உச்சக்கட்டதை அடைந்ததும், யெகோவா தேவனின் வாக்குறுதிகள் உண்மை என்பதற்கு சான்றாகும். "என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் செல்லுகிறார் என்றார்." (ஆமோஸ் 9:14-15) 1948ல் 600,000க்கும் குறைவானவர்களிடமிருந்து இன்று வரை, இஸ்ரயேலுக்கான குடியேற்றம் வளர்ந்து கொண்டே இருக்கிறது பிற நாடுகளை விட இஸ்ரயேலில் தான் யூதர்கள் அதிகமாய் இருக்கிறார்கள்.

இருப்பினும், பெரும்பாலும் யூத -விரோதத்தால் உந்தப்பட்ட இஸ்ரயேல் இன்றும் நம்பிக்கையில்லாமலேயே உள்ளது. ஒரு மத உறுப்பு நிலத்தின் அனைத்து அம்சங்களையும் ஊடுருவினாலும், கிறிஸ்து தனது மணவாட்டியாகிய சபையை நிறைவு செய்யும் வரை இஸ்ரயேல் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு குருடாகவே இருக்கும்.

நிலம் மீட்கப்பட்டு கட்டப்பட்டு வருகிறது. பாலைவனம் ரோஜா போல மலரத் தொடங்குகிறது. விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப அறிவியல் முன்னேற்றங்கள் மற்றும் கண்டுபிடிப்பகள், மனிதனின் அதிக நன்மைக்காக உலகில் பரவத் தொடங்கியுள்ளன. முந்தைய காலங்களில் ஏசாயா கூறும் பொழுது,"அவர்கள் நெடுங்காலம் பாழாய்க் கிடந்தவைகளைக் கட்டி, பூர்வத்தில் நிர்மூலமானவைகளை எடுப்பித்து, தலைமுறை தலைமுறையாய் இடிந்துகிடந்த பாழான பட்டணங்களைப் புதிதாய்க் கட்டுவார்கள்." (ஏசாயா 61:4) விரைவில் தேசம் யெகோவா தேவனால் கோகினிடமிருந்து (எசேக்கியேல் 38) காப்பாற்றப்பட்டு, பின்னர் சுத்திகரிக்கப் பட்டு, மாற்றப்பட்டு, ஒவ்வொரு வகையாக பாது காப்பிற்கும் தேவனை மறைமுகமாக நம்பக் கற்றுக்கொண்டு, யெகோவா தேவனின் கை அதை நிறைவேற்றுகிறது, எந்த யூத விரோதமும் அதை தடுக்க முடியாது.